மில்க் வைற்
நீல சோப்
★ பட்டு
★ பருத்தி
★ நைலோன்
துணிகளை
பிரகாசமாக சலவை செய்கிறது

Registered at the G. P. O. as a Newspaper விலைசதம் 20

# ஈழநாடு வார மலர்

தேசிய தினசரி National Tamil Daily
மலர் 8 இதழ் 187

பராபவ ஆவணி 7 ஐ:அவ் 6 (23-8-66) செவ்வாய்க்கிழமை

பாலக்காடு
ஆர். வி. ஜி.
பீடிகளை உபயோகியுங்கள்
தயாரிப்பாளர்கள்:
வ. வ. இராமசாமிப்பிள்ளை
அன் சன்ஸ்,
47, பீச்ரோட், யாழ்ப்பாணம்.

# தேசிய ஐக்கியத்துக்கு தமிழர் அளித்த உதவி

## ஊர்காவற்றுறை வரவேற்பில் ராஜாங்க அமைச்சர் நன்றி


நமது நிருபர் வி. பரராசசிங்கம்

ஊர்காவற்றுறை, திங்கள்

'தேசிய ஒற்றுமையைஏற்படுத்துவதற்கு ஒருதேசிய அரசாங்கத்தை நிறுவ ஒத்துழைப்பு நல்கிய தமிழ் பேசும் மக்களை நான பாராட்டாமல் இருக்க முடியாது' என்று ராஜாங்க அமைச்சர் திரு. ஜே ஆர். ஜெயவர்த்தன தெரிவித்துள்ளார்.

''நாட்டின் பொருளாதாரம் அபிவிருத்தியடைய சுபிட்சம்பெற தேசிய ஒற்றுமை அவசியமானது. இன்றைய அரசாங்க மீண்டும் தேசிய ஒற்றுமையை ஓரளவு ஏற்படுத்தியுள்ளது. தேசிய அரசாங்கம் இன, மத வேறுபாடுகளின்றி எல்லா மக்களையும் ஒரு குடும்பத்தவர்போல் மதித்து நீதி வழங்கும். தேசிய அரசை நிறுவ ஒத்துழைபபு அளித்த தமிழ் மக்களைப் பாராட்டுகின்றேன். சகல மக்களும் எதுவித பாகுபாடுமின்றி தற்போதைய அரசாங்கத்துக்கு ஆதரவு அளிக்குமாறு வேண்டிக்கொள்கின்றேன்.''

ஊர்காவற்றுறைக்கு விஜயம் செய்த ராஜாங்க அமைச்சர் திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன அங்கு அளிக்கப்பட்ட பொதுவரவேற்புக்கு நன்றி தெரிவித்துப் பேசுகையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டார். ஊர்காவத்துறை எம்.பி. திரு. வி. நவரத்தினம் தலைமை வகித்தார்.



### மகாநாடு இன்றைய நிகழ்ச்சிகள்

யாழ்ப்பாணம், செவ்.

தமிழரசு வாலிப முன்னணி மகாநாட்டின் இறுதி நாள் நிகழ்ச்சிகள் மாவிட்டபுரம் ''தியாகிகள்'' அரங்கில் காலையும், காங்கேசன்துறைப் பட்டினசபை மைதானத்தில் மாலை பகிரங்கப் பொதுக் கூட்டமும் நடைபெறு. திரு. செ. இராசதுரை தலைமை வகிப்பார்.

திரு. செ. இராசதுரை எம். பி. தலைமையில் காங்கேசன்துறையில் நடக்கும்

(12-ம் பக்கம் பார்க்க)

## ''ஐக்கியம் வந்துவிட்டது தெற்கில் குடியேறுக''

### தீவுப்பகுதி மக்களுக்கு ராஜாங்க மந்திரி அழைப்பு

யாழ்ப்பாணம், செவ்.

''தீவுப்பகுதி மக்களே, குடிநீர் உள்ளிட்டு பல பிரச்னைகள் எதிர் நோக்கியிருக்கலாம். தீவுப்பகுதியில் இருப்பவர்கள் தெற்கில் குடியேற முன்வரவேண்டும்'' என்று நேற்றுப் பகல் புங்குடுதீவு சுப்பிரமணிய வித்தியாசாலையில் அளிக்கப்பட்ட வரவேற்பில் ராஜாங்க மந்திரி திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன அழைப்பு விடுத்தார்.

''தீவுப்பகுதிகளுக்கு விஜயம் செய்வது இது முதற் தடவையல்ல. பல வருடங்களுக்கு முன்னர் திரு. ஏ. எல். தம்பிஐயாவுடன் இங்கு விஜயம் செய்திருக்கின்றேன். நான் இங்கு விஜயம் செய்தது குறித்து இப்பொழுது பெருமகிழ்ச்சியடைகின்றேன்'' என்று ராஜாங்கமந்திரி திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன கூறினார்.

''கடந்த காலங்களில் நாட்டில் இன ஒற்றுமை இல்லாததால் பல பிரச்னைகளும் தீர்க்கப்படாமலிருந்தன. ஆனல் இப்பொழுது இலங்கை மக்களிடையே ஐக்கியம் ஏற்பட்டுள்ளது. நீங்கள் தெற்கில் குடியேற முன்வரவேண்டும். நாம் எந்தப் பிரச்னையையும் தீர்க்கும் ஆற்றலைப் பெற்றுள்ளோம்'' என்று ராஜாங்க மந்திரி நம்பிக்கை தெரிவித்தார்.

''நயினதீவுக்கு தினமும் சுமார் 300 பௌத்த மக்கள் வருவதாக அறிந்து நான் சந்தோஷப்பட்டேன். அவர்களை நீங்கள் அன்புடன் வரவேற்பதாகவும் கேள்வியுற்றேன். உங்களின் அன்பை

(12-ம் பக்கம் பார்க்க)

## தொடம்பே முதலாளியை கூரையில் போடச் சொன்னர்!

### மறு விசாரணையில் சதி வழக்கு 7ம் எதிரி ஹொந்தமுனி சாட்சியம்

கொழும்பு, திங்கள்

''தொடம்பே முதலாளியை சி. ஐ. டி. கட்டடத்தின் கூரையின்மீது போடும்படி சி. ஐ. டி. பொலிஸ் சுப்பிரின்டன் திரு. ஆனந்தா செனிவரத்தின உத்தரவிட்டார். பின்னர், நான் ஏதோ விழும் சத்தம் கேட்டேன்.''

இவ்வாறு இன்று கொழும்பு கோட்டை நீதவான் முன்னிலையில் தொடம்பே முதலாளியின் தற்கொலைபற்றிய மறுவிசாரணையின்போது, சதி வழக்கின் ஏழாவது எதிரியான சார்ஜண்ட் ஹொந்தமுனி சாட்சியமளிக்கையில் கூறினார்.

இராணுவ சிக்னல் சேவையில் கடமையாற்றும் 30 வயதான சார்ஜண்ட் ஹொந்தமுனி, புதிய காரியாலயக் கட்டிடத்தின் நாலாவது மாடியிலுள்ள சி. ஐ. டி. க்கந்தோரில் கடந்த ஏப்ரல் 15-ந் திகதி தன்னை சி. ஐ. டி. பொலிஸ் சுப்ரின்டண்டன்ட் ஆனந்தா செனிவரத்தின விசாரித்துக் கொண்டிருந்ததாகக் கூறினார்.

அப்பொழுது கதிரையன் விழும் சத்தமும், ஒரு மனிதர் தாக்கப்படுவதையும் ''என்னைக்கொலை செய்கிறுன்'', ''அம்மோ'' என்று யாரோ கத்துவதையும் தான் கேட்டதாக அவர் மேலும் தமது சாட்சியத்தில் கூறினர். அங்கு தன்னுடன் விசாரிக்கப்பட்ட கோப்ரல் பத்துவத்தெ, தாங்கள் சி. ஐ. டி காரியாலயத்தில் கண்ட ஒரு மனிதன் தொடம்பே முதலாளிஎன்று தன்னிடம் கூறியதாகவும் சாட்சி தெரிவித்தார்.

புரட்சிச்சதி பற்றி தான் கேள்விகேட்கப்பட்டபோது இன்ஸ்பெக்டர் ரகுலா டி சில்வா அடிக்கடி அறைக்குள் வந்து செனிவரத்தினவுடன் இரகசியமாகக் குசுகுசுத்தார். இப்படி அவர் பல தடவை வந்து சென்றபின் 'அம்மே' என்று பலத்த சத்தத்தைத் தான் கேட்டதாகவும், அதன் பின் இன்ஸ்பெக்டர் ரகுலா அறைக்குள் வந்து செனிவரத்தினவிடம் இரகசியமாக ஏதோ கூறியதாகவும் சார்ஜண்ட் ஹொந்தமுனி தமது சாட்சியத்தில் மேலும் தெரிவித்தார்.

''இன்ஸ்பெக்டர் ரகுலா இப்படி இரகசியமாக ஏதோ கூறியதும், செனிவரத்தின தனது தலையைத் தாங்கிக்கொண்டார். அவரது முகபாவம் மாறியது ரகுலா டி சில்வாவுடனும், இன்ஸ்பெக்டர் பாரிஸுடனும் செனிவரத்தின

(12-ம் பக்கம் பார்க்க)

### முகமலர்ச்சியில் குறைதெரியவில்லையே!

மந்திரி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன மேலும்பேசுகையில் கூறியதாவது:-

நாடுமுழுவதிலும் வரட்சி சில காலங்களில் நிலவுவதால் குடிநீர்ப் பிரச்னைகள் ஏற்பட்டுள்ளது. தீவுப் பகுதியில் நீர்த்தட்டுப்பாடு நிலவுவதாக தமிழ் எம். பி.க்கள் அரசாங்கத்தின் கவனத்துக்குப் பல முறைகள் கொண்டுவந்துள்ளனர். ஆனல் இன்று கூடியுள்ள மக்கள் முகங்களில் காணப்படும் மலர்ச்சி உங்கள் மத்தியில் தண்ணீர் குறைபாடு இல்லை என எண்ணத்தோன்றுகின்றது. மக்கள் முகங்களில் எழுச்சி தவழுகின்றது. எனினும் ஸ்தலஸ்தாபன

12-ம் பக்கம் பார்க்க

## ''இலட்சியப் பயணம் இன்னும் முடியவில்லை பொறுமை, கட்டுப்பாடு வாலிபர்களுக்குத் தேவை''

### தமிழரசு வாலிப் முன்னணி மகாநாட்டில் இராசதுரை

மாவிட்டபுரம், திங்கள்

நம் இலட்சியப் பயணம் இத்துடன் முடிந்துவிடவில்லை. முற்றுப்பெற்றுவிடவில்லை. நம் இலட்சியம் வெகுதூரத்திலிருக்கிறது. அதை அடைவதற்குத் தமிழ் மக்களுக்கு, குறிப்பாக வாலிபர்களுக்குப் பொறுமை, கட்டுப்பாடு, தியாக உணர்ச்சி மென்மேலும் வேண்டும்.

''தமிழ் உரிமை மசோதா தமிழரசுக் கட்சியின் மாபெரும் வெற்றி. இது நாம் செய்த தியாகத்தின் பரிசு. மாவட்டசபை மசோதா விரைவில் நிறைவேற்றப்படவிருக்கிறது. இவ்விரண்டு மசோதாக்களும் தமிழ் மக்களுக்குமட்டுமல்ல [illegible] நன்மையானவை.''

(11-ம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

வாரசாரம் அரசியல் நிருபர்

# அமைச்சர்கள் விஜயம் அளிக்கும் பயன்

## போட்டி போட்டு வரவேற்பு அளிப்பது எதற்காக?

"உங்கள் நண்பனாகவே இங்கு வந்திருக்கிறேன். உங்கள் தேவைகளை, குறைகளை நேரில் கண்டறிந்து ஆராய்ந்து அவற்றை நீக்குவதற்கு ஆவன செய்வேன்."

நேற்றுக்காலை பலாலி விமான நிலயத்தில் வந்திறங்கிய ராஜாங்க மந்திரி திரு ஜே. ஆர். ஜயவர்த்தன "ஈழநாடு" பத்திரிகைமூலம் இப்பகுதிமக்களுக்கு விடுத்த விசேஷ செய்தியில் தெரிவித்திருந்தார்.

யாழ்ப்பாணப் பகுதி மக்களுக்கு மட்டுமல்ல. வடக்கு, கிழக்கு மாகாண மக்களின் தேவைகள்பலவுண்டுசென்ற சில வருடங்களாக ஆட்சி பீடத்திலிருந்தவர்கள் அரசியல் மற்றும்காரணங்களால், தமிழ்ப் பகுதியை புறக்கணித்து வந்தனர். "தனக்கு மூக்குப் போனாலும் எதிரிக்குச்சகுனப்பிழையானால்போதும்" என்ற மனப்பான்மையினால், இந்நாட்டின் பொருளாதாரவிருத்திக்குத் தேசிய ஐக்கியம் அவசியம் என்பதை மறந்து. இந்நாட்டின் மிக முக்கியமான ஒரு சமூகத்தை அவர்கள்புறக்கணித்து நடந்தனர். இதன் விளைவாக வடக்கு, கிழக்கு மாகாண மக்களின் ஒத்துழைப்போ ஆதரவோ அவர்களுக்குக் கிடைக்கவில்லை. அந்த அரசாங்கங்களுக்கும் வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கும் தொடர்பே இல்லையென்ற நிலையும் ஏற்பட்டது. இதனால் நாட்டின் பொருளாதாரம்சீர்குலைந்தது. வடக்கு கிழக்கு மாகாணங்களின் தேவைகள் அதிகரித்தன.

அரசாங்கம் இப்பகுதி மக்களின் உரிமைகளை வழங்க மறுத்ததால் இப்பகுதி மக்களின் தேவைகளைக் கவனிக்க முன்வராத அந்த அமைச்சர்கள் வடக்கு. கிழக்குப்பகுதிகளுக்கு வரமுடியாதிருந்தது.

இன்று நிலமை மாறியுள்ளது. தேசிய அரசாங்கம் உருவாகி தமிழ் பேசும் மக்கள் பெரும் பான்மையாக வாழும் வடக்கு, கிழக்கு மாகாணங்களும் இந்த நாட்டின் பகுதிகள் தானென்பதையும் தமிழ்பேசும் மக்களும் இந்நாட்டின் பிரஜைகளென்பதையும் அரசாங்கம் உணர்ந்துவருவதுடன் பெரும்பான்மை மக்களும் உணர்ந்து வருகின்றனர்.

இந்த நல்லுறவும் நல்லெண்ணமும் வளர்ந்துவருவதன் பயனை அரசாங்கத்தில் தமிழ் பேசும் மக்களுக்கும் பங்குண்டென்பதையும் இந்தநாடே தமது நாடென்பதையும் நாட்டின் முன்னேற்றத்திற்குத் தாங்களும் ஒத்துழைப்பளிக்க வேண்டுமென்பதையும் தமிழ்பேசும் மக்களும் உணர்ந்துகொண்டனர்.

இதனால் தமிழ்பேசும் மக்களின் நல்லுறவையும் ஒத்துழைப்பையையும் பெற தேசிய அரசாங்கப் பிரதமரும் அமைச்சர்களும் நேசக்கரம் நீட்டி வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு வருகின்றனர். அவர்களுக்கு ஆதரவும் ஒத்துழைப்புமளிக்க உறுதிகொண்டு அவர்களைத் தமிழ் பேசும் மக்களும் அன்புடன் வரவேற்கின்றனர்.

ராஜாங்க அமைச்சர்தெரிவித்துள்ளதுபோல் நட்புறவை உருவாக்க, வளர்க்க இங்கு அமைச்சர்கள் வருகிறார்கள், இப்பகுதி மக்களின் குறைகளை, கஷ்ட, நஷ்டங்களைக் கண்டறிந்து கொள்கிறார்கள் குறைகளைத் தீர்க்கவேண்டுமென அவர்கள் ஆவல்கொள்கின்றனர். இதனால் அமைச்சர்களின் விஜயம் அவர்களுக்கும் பயன்படுகிறது. வடக்கு, கிழக்கு மாகாணமக்களும் பயனடைகின்றனர்.

பிரதமரின் வடபகுதி விஜயத்தின் மிகப்பெரிய பயன், மகாவலிகங்கை வடக்கே திரும்புமென்பதை உறுதிப்படுத்தியிருப்பதாகும். நேற்று முன் தினம் ஜனப்பிரதிநிதிகள் சபையில் பேசுகையில், மகாவலி கங்கையை வடக்கே திருப்புவதற்கான வேலைகள் விரைவில் ஆரம்பமாகுமெனப் பிரதமர் திட்டவட்டமாக அறிவித்திருக்கிறார்.

ராஜாங்க அமைச்சர் வடபகுதியில் வானொலி நிலயம் அமைப்பதற்கான முதல் நடவடிக்கையாக நாளை பரந்தனில் 25 ஏக்கர் நிலத்தில் வானொலி அஞ்சல்நிலயம் அமைப்பதற்கு அடிக்கல் நாட்டவிருக்கிறார் வானொலி ஒலிபரப்பு நிலயம் மட்டுமல்ல மேலும் பல பயன் ராஜாங்க அமைச்சரின் விஜயத்தினால் ஏற்படவேண்டும்

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் விவசாயத்தைத விருத்திசெய்யவும், கைத்தொழிலைப் பெருக்கவும் நிறைய வாய்ப்பிருக்கிறது. ஏராளமாக தொழிற்சாலைகள் அமைத்து உற்பத்தியைப் பெருக்கி, ஏற்றுமதிமூலம் நாட்டின் செல்வத்தைப் பெருக்க வழியுண்டு.

இதற்கு அமைச்சர்களும் ஒவ்வொரு துறையையும் சேர்ந்த நிபுணர்களும் இப்பகுதிகளுக்கு அடிக்கடி விஜயம்செய்யவேண்டும்.

### கட்சிகளுக்குள் ஏற்படும் போட்டி

பிரதமரை ஒரு அரசியல் கட்சி ஒரு மாகாணத்துக்கு அழைத்தால் மற்றொரு கட்சி மற்றொரு மாகாணத்துக்கு அழைக்கிறது. ஆடம்பரமாக அமோக வரவேற்பு அளித்து உபசரிக்கிறது. அமைச்சர்களைப் போட்டி போட்டு அழைப்பதில் தவறில்லை. ஆலவட்டம் கொடி குடை பிடித்துத் தங்கள் கட்சிகளின் செல்வாக்கைக் காட்டுவதற்காக அமைச்சர்களை அழைப்பதால் பயன் இல்லை. இப்பகுதி மக்களின் குறைகளை எடுத்துக்கூறி அவற்றை நீக்க அமைச்சர்களை அழைத்து அதைப் பயன்படுத்தவேண்டும்.

---

## லாபம் தரும் கூட்டுத்தாபன ஊழியருக்கு பென்ஷன்

### தொழிலாளர் மகாநாட்டில் யோசனை

மாவிட்டபுரம், திங்கள்

"வருடந்தோறும் பல இலட்ச ரூபாய்களை நஷ்டமடையும் புகையிரதப்பகுதி ஊழியருக்கு பென்ஷன் வழங்கும் அரசாங்கம் பல லட்ச ரூபாய்களை லாபமாக ஈட்டித்தரும் அரசாங்க கூட்டுததாபன ஊழியருக்கு பென்ஷன் கொடுக்க மறுப்பது விந்தையாக உள்ளது. அரசாங்கக் கூட்டுத்தாபன ஊழியர்களுக்கும் பென்ஷன் கிடைக்க வகை செய்யப்படுதல் வேண்டும்" என்று மாவிட்டபுரத்தில் நடைபெற்ற தொழிலாளர் மகாநாட்டுக்குத் தலைமைவகித்துப் பேசிய திரு. சி. க. சபாபதி கூறினார்.

திரு. சி. க. சபாபதிதமது உரையில் பேசும்போது கூறியதாவது:

1956-ம் ஆண்டுவரை கைத்தொழில் இலாகாவின் மேற்பார்வையில் இயங்கி வந்த சிமிந்தித் தொழிற்சாலை நிர்வாகத்தை 1956ல் அரசாங்கம் கூட்டுத்தாபனத்தின்கீழ் கொண்டு வந்தது. கூட்டுத்தாபனம் உருவாக்கப்பட்டபோது தொழிலாளர் சகாயநிதி அவர்களிடமே திருப்பிக் கொடுக்கப்பட்டது. சகாயநிதி அவர்களிடம் கொடுபடாதிருந்தால் இன்று அவர்கள் அதிக கூடுதலான தொகையைப் பெற்றிருக்க முடியும்.

சிமிந்தித் தொழிற்சாலை ஊழியர்கள் கடின உழைப்பு, மின்சாரக் கோளாறு, கைத்தவறுதல்களால் தமது வாழ்நாளைக் குறைத்துக் கொள்ளுகிறார்கள். அவர்களது குடும்பத்தாரின் நலனுக்காக சகாயநிதி வழங்கப்படுவது அவசியமானது.

மலையகத் தொழிலாளர் கழகத்தைச் சேர்ந்த திரு. கலியப்பெருமாள் பேசுகையில் கூறியதாவது:

தொழிற்சங்க நடவடிக்கையில் அரசியல்தலையீடோ வெளியார் தலையீடோ இருக்கக்கூடாது எனச் சொல்வது தவறு. ஜனநாயக சுதந்திரத்துடன் இயங்கும் தொழிற்சங்கம் தனது எண்ணப்படி சுதந்திரமாகஇயங்குவதனைத் தடைசெய்யமுடியாது.

வாலிப உள்ளங்கள் நாம் எந்த அரசியல் கட்சியின் கொள்கைகளைப் பின்பற்றுகின்றனவோ அந்தக் கட்சியின் இலட்சியங்களுக்குப் பின்துணையாகஇருப்பதனைக் காண்கிறோம்.

தொழிலாளர் மகாநாட்டில் திருவாளர்கள் மா. பீதாம்பரம், ஆ. க[illegible], ஆ. ஹென்றி முதலானோரும் பேசினர்.

### சைக்கிள் ஊர்வலம்

மானிப்பாய் கிராம சபைத் தலைவர் திரு. சி. மார்க்கண்டு அவர்களின் தலைமையில் சாவல்கட்டு தமிழரசு வாலிபர்களின் சைக்கிள் ஊர்வலம்!

சாவல்கட்டு வாலிபர்கள் 23-ம் திகதி மாலை 3 மணிக்கு சாவல்கட்டு இ. மு. ச. மண்டபத்திலிருந்து மாபெரும் சைக்கிள் ஊர்வலமாக தமிழரசு வாலிப முன்னணி மகாநாட்டை அடைவார்கள்.

934

---

## உங்கள் நண்பனாக . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ராஜாங்க அமைச்சர் திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன, திருமதி ஜயவர்த்தன. ராஜாங்க அமைச்சரின் பார்லிமெண்டரிக் காரியதரிசி, அந்தரங்கக் காரியதரிசி, யாழ்ப்பாண மாவட்டத்தின் முன்னாள் அரசாங்க அதிபர் திரு. நெவில் ஜயவீரா ஆகியோரைத் தாங்கிவந்த, இலங்கை விமானப்படையைச் சேர்ந்த விசேஷ விமானம் காலை 8-30க்கு பலாலி விமான நிலயத்தில் வந்திறங்கியது.

### அதிபர் மாலை சூட்டினார்

விமானம் நின்றதும் முதலிலே ராஜாங்க அமைச்சர் ஜயவர்த்தனவும் அவரின் பின்னே திருமதி ஜயவர்த்தனவும் இறங்கினர். திரு. ஜயவர்த்தனவுக்கு யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் திரு. வேர்ணன் அபயசேகரா மலர்மாலை சூட்டி வரவேற்றார்.

நாதஸ்வர வாத்தியம் மங்கல இசை ஒலிக்க, திரு. ஜயவர்த்தன தம்பதிகள் விமான நிலயத்திலிருந்து, விமான நிலயக் கட்டிடத்துக்கு இட்டுச் செல்லும் பாதையில் நடந்துவந்தனர். கட்டிடத்துக்குச் செல்லும் வாயிலில் பூரண கும்பம் வைக்கப்பட்டிருந்தது.

### நீடு வாழ ஆசி

"உங்கள் ராஜ்யம் உயர்ந்த முறையில் நடைபெற்று நீடூழி வாழவும் ராஜாங்க மந்திரி திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன நீடூழி வாழவும் மாவிட்டபுரம் முருகனும், நகுலேஸ்வரப் பெருமானும் அருள்புரிவாராக" என்று மாவிட்டபுர ஆதீனத் தலைமைகுரு [illegible] ராஜாங்க அமைச்சரை ஆசீர்வதித்து அவருக்கு மலர் வழங்கினர்.

விமானநிலயத்தில் யாழ்ப்பாணப் பகுதியிலுள்ள பல பாடசாலை களிலிருந்தும் தெரிவுசெய்யப்பட்ட சாரணர்கள் சாரண இயக்கக் கிளைத்தலைவர் திரு. ஆர். வி. ராஜநாயகத்தின் தலைமையில் அணிவகுப்பு மரியாதை அளித்தனர்.

இதைத்தொடர்ந்து காரியாதிகாரி திரு. டி. முருகேசம்பிள்ளை அமைச்சருக்கு மாலைசூட்டினார். திருமதி முருகேசம்பிள்ளை திருமதி ஜயவர்த்தனவுக்கு மலர் மாலை சூட்டினார்.

அமைச்சர் ஜயவர்த்தன தம்பதிகளை வரவேற்பதற்கு உள்ளூராட்சி அமைச்சர் திரு. எம். திருச்செல்வமும் தமிழரசுக்கட்சித்தலைவர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம், டாக்டர் ஈ. எம். வி. நாகநாதன், செனட்டர் எஸ். நடராசா, திரு. வி. நவரத்தினம், திரு. ஏ. அமிர்தலிங்கம், திரு. எஸ். கதிரவேலுப்பிள்ளை மற்றும் தமிழரசுக்கட்சிப் பிரமுகர்களும் திருமதி செல்வநாயகம், திருமதி அமிர்தலிங்கம், திருமதி நடராசா, திருமதி நவரத்தினம் ஆகியோரும் அரசாங்க அதிகாரிகள், முன்னாள் மாவட்ட நீதிபதிதிரு. ஸி. தனபாலசிங்கம், முன்னாள் யாழ்ப்பாண மேயர் திரு. டி. எஸ். துரைராஜா. திரு. எஸ். ஸி. மகாதேவா, திரு. எஸ். நாகராசா ஆகியோரும் மற்றும் பிரமுகர்களும் திரண்டிருந்தனர்.

தம்மைவரவேற்கத்திரண்டிருந்த பிரமுகர்களை மலர்ந்த முகத்துடன் கரம்கூப்பி வணக்கம் தெரிவித்துக் கொண்ட அமைச்சர் ஜயவர்த்தன, விமானநிலயத்தற்கு வெளியும், விமான நிலயக் கட்டிடத்தின்மீதும் திரண்டிருந்த மக்களுக்கும் புன்சிரிப்புடன் கரம்கூப்பி வணக்கம் தெரிவித்துக் கொண்டார்.

விமானநிலயக் கட்டடத்தின் வெளி வராந்தாவில் செனட்டர் எ. நடராசா அமைச்சருக்கு மாலை சூட்டி அமைச்சரை மோட்டார் காருக்கு அழைத்துச் சென்றார்.

### வாலிபர்கள் முன் செல்ல

அமைச்சர் திரு. ஜயவர்த்தனவும் திரு. செல்வநாயகமும் அரசாங்க அதிபர் வேர்ணன் அபயசேகராவும் ஒரு காரின் பின் ஆசனத்தில் அமர்ந்திருக்க மற்றொரு மோட்டார் காரில் திருமதி ஜயவர்த்தனவும் திருமதி செல்வநாயகம்ஆகியோர் அமர்ந்திருக்க தமிழரசு எம். பி.க்களும் பிரமுகர்களும் இதர மோட்டார் கார்களில் பின்செல்ல பொலிஸ் ஜீப் முன்னும் பின்னும் பாதுகாப்பாகச் செல்ல விமான நிலயத்திலிருந்து அமைச்சர் பவனியாக காங்கேசன்துறைக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

மோட்டார் பவனிக்கு முன்னே தமிழரசுக் கட்சியின் மூவர்ணக் கொடிகளைத் தாங்கிய வண்ணம் ஆயிரக்கணக்கான இளைஞர்கள் சைக்கிள்களில் முன்சென்றனர்.

காங்கேசன்துறை விருந்தினர் விடுதிக்கு அமைச்சர் போய்ச்சேரும்வரை வழி நெடுகிலும் பாதையின் இருமருங்கிலும் ஆண்களும் பெண்களும் குழந்தைகளுமாக பெருந்திரளானோர் மகிழ்ச்சி ஆரவாரம்செய்து அமைச்சரை வரவேற்றனர் மயிலிட்டி சந்தியில் அமைச்சரை அப்பகுதி மக்கள் உற்சாகத்துடன் மலர்மாலைகள் சூட்டி வரவேற்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## கலைப்பணி வளர்க்கும் குடும்பம்



திரு. டபிள்யூ. எம். குமாரசுவாமி.

சங்கீதம் நாட்டியம், நாடகம் ஆகியவற்றை எள்ளிநகையாடிய காலம் அது. அவற்றில் ஈடுபடுபவர்கள் வாழ வழி தெரியாதவர்கள் என்ற புன்மொழி பேசப்பட்ட காலம் ஒரு குறிப்பிட்ட சாதியாரேயன்றி நற்குலத்தோர் கலைபயிலுவது அவமானம் என்று கருதப்பட்ட அறிவில்லாக் காலம்.

அப்பேர்ப்பட்ட காலத்தில் யாழ்ப்பாண நந்நகரில் வாழ்ந்த பெருங்குடி மகனூர் ஒருவர் நுண்கலைகளில் ஆர்வங்கொண்டு கலை பயிலுவோரை ஆதரித்தும், கலை நிகழ்ச்சிகளை மகிழ்ச்சியோடு பருகியும் கலைச்செல்வத்தில் துய்த்திருந்தார். அவருடைய கலையுள்ளம் அவர் தம் இல்லத்தில் பிரதிபலித்தது. வரவேற்பறையில் குத்துவிளக்குகளும், சந்தனக் கும்பாக்களும், பட்டுக் கம்பளங்களும், வண்ண விதானங்களும் கலைவைச் சொரிந்தன. கலைஞர்களை அன்புடன் வரவேற்று அறுசுவை உண்டியிந்தார்.

இவருக்கு தெய்வ கடாச்சத்தால் சகல ஐசுவரியங்களுடன் புத்திர பாக்கியமும் நிறைந்திருந்தது தம் மக்களையும் கலைச் செல்வர்களாக்க விரும்பினார். கலை சூழ்நிலையில் பிறந்த புத்திரர்களும் புத்திரிகளும் தவளைக் குஞ்சு தண்ணீரில் பாய்வது போல் இயல்பாகவே கலை வாழ்க்கையை மேற்கொண்டனர்.

இன்று தங்கைஅபிநயம் பிடிக்க அண்ணன் பிற் பாட்டுப்பாடுகிறான். இன்னொருசகோதரியும் இசை பாடுகிறாள் மற்ற சகோதரி கூடவே ஆடுகிறாள். குடும்பத்திலுள்ள இன்னும் பல சகோதரிகளும் மருமக்களும்பேத்திகளும் கலை நிகழ்ச்சிகளில் பங்கு பற்றுகிறார்கள். பார்ப்பதற்கு ஆனந்தமாயிருக்கிறது.


இந்தக் கலைக் குடும்பத்தைத் தோற்றுவித்தவர் காலஞ்சென்ற டபிள்யூ. எம். குமாரசுவாமி ஆவார்.

திரிபுரசுந்தரியின் மூத்த சகோதரி திருமதி அன்ன லட்சுமி அம்பலவாணர் சென்னை பல்கலைக் கழகத்தில் சங்கீதப் பட்டம் பெற்றவர்.

இவருடைய புத்திரி திரிபுரசுந்தரி குமாரசுவாமி 'நாட்டிய கலா கேசரி' வழுவூர் ராமையா பிள்ளையிடம் நாட்டியம் பயின்று யாழ்ப்பாணத்திலும் கொழும்பிலும் பிற இடங்களிலும் பல நாட்டிய நிகழ்ச்சிகளை திறம்பட நிகழ்த்தியுள்ளார்.

மகன் திரு. ராம் குமாரசுவாமி சென்னை பல்கலைக்கழகத்தில் 'சங்கீத டிப்புளோமா. இன்னொரு மகள் திருமதி சத்தியபாமா ராஜலிங்கம், பி ஏ. (சங்கீதம்). வேறொருமகள் ஜனகா குமாரசுவாமி பாட்டும் பாடுவாள், நாட்டியமும் ஆடுவாள்.

இப்படியே கலைப்பணி புரியும் ஒரு திருக்குடும்பம் இது.



'ஆண்டாள்'நாட்டிய நாடகத்தில் செல்வி உமையாள் ரத்தினசிங்கமும் செல்வி அம்பிகை குமாரசுவாமியும்.

இம்மாதம் 6-ம், 7-ம் திகதிகளில் திரு. குமாரசுவாமியும் அவருடைய கலை மன்ற மாணவிகளும் ஆண்டாள் நாட்டியநாடகம் என்ற கலை நிகழ்ச்சியை யாழ்ப்பாணம் மாநகரசபை மண்டபத்தில் நடத்திக் காண்பித்தார்கள்

யாழ்ப்பாணத்து இளம் நங்கையர்கள் பலர் இதில் பங்குபற்றி நிகழ்ச்சியைச் சிறப்பித்தனர். முதலாம் நாள் மேடைவசதி ஒலிபெருக்கி வசதி முதலியவற்றில் சில கஷ்டங்கள் ஏற்பட்ட போதிலும் இரண்டாம் நாள் நிகழ்ச்சி ஒழுங்காக நடைபெற்றது.

திரிபுரசுந்தரியும் அவருடைய மாணவர்களும் திரு. குமாரசுவாமி குடும்பத்தவர்களும் மேன்மேலும் இத்தகைய சிறப்பான கலை நிகழ்ச்சிகளை அளிப்பார்கள் என்று [illegible]

---

துடித்து வந்த கடிதம்

## மன்னிக்க மாட்டோம்!

அண்மையில் இலங்கைக்கு வந்த நகைச்சுவை நடிகர் டணால் தங்கவேலுவுக்கும் அவர் கோஷ்டியினருக்கும் யாழ்ப்பாணத்து மக்கள் இருகை நீட்டி, இன்முகம் காட்டி, மனமுவந்த வரவேற்பளித்தார்கள். ''என்றும் யாழ்ப்பாணத்து மக்களையும் அவர்கள் எமக்குக் காட்டிய அன்பையும் மறக்கமாட்டோம்'' என்று திரு. தங்கவேலுவும் அவரது துணைவியார் திருமதி சரோஜாவும் சொன்னார்கள், இங்கு!



ஆனல் தங்கவேலு சென்னை சென்றதும் யாழ்ப்பாணத்தை அடியோடு மறந்துகொண்டு விட்டாரென்றால் அவரை மன்னிக்க முடியுமா? இலங்கையிலுள்ள தினப் பத்திரிகையொன்றின் சென்னை நிருபருக்கு அளித்த பேட்டியொன்றில் யாழ்ப்பாணத்துக்கு வந்ததைப் பற்றி ஒருவார்த்தையாவது சொல்லவில்லையே! கொழும்பு, பதுளை, வவனியா என்று போன இடங்களெல்லாவற்றையும் நினைவில் வைத்திருக்கும் தங்கவேலு யாழ்ப்பாணத்தை மீண்டும் மறந்து விட்டாரென்றால்...

நடிகர்களென்றால் படங்களில் மட்டும்தான் நடிப்பவர்கள் என்று எண்ணியிருந்தோம். ஆனல் நிஜ வாழ்க்கையிலும் அவர்கள் ஒரு நடிகர்கள்தான் என்பதைச் சொல்லாமல் சொல்லிக்காட்டி விட்டார் தங்கவேலு!

இவரை என்றும் யாழ்ப்பாணத்துமக்கள் மன்னிக்கமாட்டார்கள்!

கு. ரகுநாதன், யாழ்ப்பாணம்

நீங்களும் படியுங்கள்!

---

பார்த்துவிட்டு எழுதினர்கள்

## கூட்டுறவுப் பாதையிலே.....

வலி. கிழக்கு பலநோக்குச் சமாசம் நடாத்திய கூட்டுறவுவிழாவில் முதல் பரிசுபெற்ற நாடகமான 'கூட்டுறவுப் பாதையிலே...' நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரிமண்டபத்தில் மேடையேற்றப்பட்டது.

பணக்காரப் பரமசிவமாக நடித்த கே. சி சிவசுப்பிரமணியம் பண்பட்ட ஒரு நடிகர் என்பதை அவர் நடிப்பு சொல்லாமல்சொல்லியது. அவர் நடிப்பு அடிக்கடி ரசிகர்களைச் சிரிக்கவைத்துக் கொண்டேயிருந்தது.

பணக்காரரின் மனைவியாக நடித்த மாணிக்கம் நடிப்பு 'அனுபவம் புதுமை' என்பதைக்காட்டியது! மகள் ராணியாக காந்தனி நடித்தார். வேஷப் பொருத்தம் அருமை; நடிப்புத்தான் 'வரா'மல்போய்விட்டது.

ஒளி, ஒலி பரவாயில்லை. மொத்தத்தில் நாடகம் முதல் பரிசுக்கு ஏற்ற நாடகம்தான்!

—சிவா

### நடந்து வந்த பாதையிலே...

நல்லூர் கலைச்சுடர் நாடக மன்றத்தின் முதலாவது தயாரிப்பான 'நடந்து வந்த பாதையிலே' என்னும் சமூக நாடகம்நல்லூரில்மேடையேற்றப்பட்டது.

குடிகாரன் ஒருவனின் வாழ்வை மையமாக வைத்து 'விந்த'னால் எழுதப்பட்டதுதான் இந்த நாடகம்.

'கிணிங் கிணிங்' முத்தையாவாகநடித்துசிரிப்பு விருந்தளித்த தி. செல்வராசா நாடகத்தின் உயிர்நாடி என்று சொல்லக் கூடியவிதத்தில் சிறப்பாக நடித்தார். மற்றக்காட்சிகளெல்லாம் விறுவிறுப்பாக அமையவில்லை.

### இரத்தக் கரங்கள்

நல்லூர் சங்கிலியன் நாடகமன்றத்தின் 11வது தயாரிப்பான 'இரத்தக் கரங்கள்' துப்பறியும்நாடகம். கவிஞர் சொக்கன் தலைமையில் நல்லூர் சாதனா பாடசாலையில் மேடையேற்றப்பட்டது.

இலங்கை - இந்தியக் கடத்தல் கோஷ்டி ஒன்று காலை 6 மணியிலிருந்து இரவு 10 மணிவரை செய்யும் அட்டகாசங்களைஒரே செட்டில் அமைத்துஅளித்தது ரெம்பவும் பாராட்டக் கூடியதாகவிருந்தது. நல்லை அமிழ்தன் கதை-வசனம்-டைரக்ஷன் பொறுப்புக்களை ஏற்றிருந்தார்.

பரந்தாமன், ஸ்ரீதர், அமுதா, அமுதனாக நடித்தவர்கள் பாத்திரத்தை உணர்ந்து சிறப்பாக நடித்தாலும்ஏனையநடிகர்களின் ஒத்துழைப்புக் கிடைக்காததால் நாடகத்தின் சில காட்சிகளைச் சுவைக்கமுடியவில்லை... ...

ஆனாலும் மொத்தத்தில் 'இரத்தக் கரங்கள்' ஒரு வெற்றி நாடகம் என்றே சொல்லலாம்.

—தி. செ. ராஜா.

### ஸ்பெஷல்

சமீபத்தில் சென்னை சென்று திரும்பிய திரு. இரா. சுந்தரராஜன் 'கலையரங்கம்' பகுதி வாசகர்களுக்காக பிரபல தென்னிந்திய திரைப்பட நடிக நடிகையர்கள் பலரைச் சந்தித்து, சுவையான தகவல்களைச் சேகரித்துக் கொண்டு வந்திருக்கிறார். அடுத்த வாரத்திலிருந்து இந்த விசேஷ பேட்டிகள் ஆரம்பமாகும். முதலில் நீங்கள் சந்திக்கப்போவது கவர்ச்சி நடிகை கே. ஆர். விஜயாவைத்தான்!

### அடுத்த வார அரங்கத்தில்..

○ ஹாலிவூட்டின் காதல் மன்னன் மார்சலோமஸ்டிராயானி பற்றி 'மேகலா' எழுதுகிறார்! படித்துச் சுவைக்க ஒரு கட்டுரை இது!

○ நட்சத்திரக் கட்டுரை.

○ தென்னிந்திய திரைப்பட உலகத்தைப் பற்றிய பல சுவையான செய்திகள். இன்னும் பல உண்டு படித்து மகிழ!

### ஆதரவு கொடுங்கள்

இளம் துடிப்பு உள்ள நடிகர்களுக்கு மேலும் மேலும்ஆதரவுகொடுத்து அவர்களை ரசிகர்கள் ஊக்கப்படுத்த வேண்டும்.'' இவ்வாறு ஏ வி. எம். ராஜன் சொன்னார்.

பிலகரி எழுதிய ''ஆலமரம்'' நாடகத்தில் நடிகை புஷ்பலதா, நடிகர்கள் வி.எஸ். ராகவன், முஸ்தபா, ஜெமினி, மகாலிங்கம், பொன்னம்பலம் ஆகியோர் நடித்திருக்கின்றனர்.



ஆண்டாளும் தோழியரும்- செல்விகள் திரிபுரசுந்தரி குமாரசுவாமி, கல்யாணி பாலச்சந்திரன், சுஷீலா பஸ்தியாம்பிள்ளை, கோகிலா கந்தையா, மனீதா மார்ஸோ, ஜானகி குமாரசுவாமி, விமலஜோதி மதிபாலசிங்கம், கௌரி நாகலிங்கம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேர் கந்தையா வைத்தியநாதன்

**சேர். கந்தையா வைத்தியநாதன் மறைந்து இம் மாதம் 27-ம் திகதியுடன் ஓராண்டு பூர்த்தியாகிறது. அரசாங்க அதிபராக, அரசாங்க உயர் அதிகாரியாக, அமைச்சராகப் பணியாற்றிய சேர். கந்தையா தமிழுக்கும் சைவத்துக்கும் பெருந் தொண்டாற்றினர். இலங்கையின் பாடல் பெற்ற தலமாகிய திருக்கேதீச்சரப் புனருத்தாரணத்துக்கு அவர் செய்த சேவை அளப்பரியது. அன்னாரின் நினைவாக இக்கட்டுரை இங்கு பிரசுரிக்கப் படுகிறது.**

“செயற்கரிய செய்வார் பெரியார், சிறியர் செயற்கரிய செய்கலாதார்” என்பது திருவள்ளுவர் திருவாக்கு. இதற்கு இலக்கணமாக எங்கள் மத்தியிலே இருந்து உலகத்தைத் துறவாமலே உலகத்தோடொட்ட ஒழுகிக்கொண்டு, செயற்கரிய செய்து பெரியராக வாழ்ந்தவர் சேர் கந்தையா வைத்தியநாதன் அவர்கள். அவரின் திடீர் மறைவு ஈழத்து மக்கள் எல்லோரையும் அதிர்ச்சியிலும் பெருந்துயரத்திலும் ஆழ்த்திவிட்டது. அவர் ஆற்றி வந்த அளப்பெருந்தொண்டு தனி ஒரு மனிதனால் செய்ய முடியாதவொன்றாகும். காடாய்க் காட்சியளித்த திருக்கேதீசுவரத் தலத்தை, அடியார்கள் ஆயிரக்கணக்காகச் சென்று வசதியாய் நின்று தரிசித்துத் திருவருள் பெற்றுய்யத்தக்க முறையில் கோயிற் புனர் அமைப்பு ஆரம்ப வேலைகளைச் செய்து, மடங்கள் பலவற்றை நிறுவுவித்து, நந்தவனம், வித்தியாலயம், தீர்த்தத் தடாகம் முதலியவற்றையும் அமைப்பித்து பாதைகள், வீதிகள், கடைகள் பல திறந்தும் நற்பணி செய்தார். அந்திருத்தலத்தின் பண்டைய சீரும் சிறப்பும் அமைந்த நிலைக்கு மீண்டும் உயர்த்த அன்பர்கள் பலரும் சேர்ந்து உழைக்க ஊக்குவித்துச் செய்த இப்பணியொன்றே எந்நாளும் அழியாத சிலையாய் இப்பெரியாரை நினைவூட்டிக்கொண்டிருக்கும். அரசாங்கத்தில் உயர் பதவியிலிருந்து பின்பு ஓர் அமைச்சராயும் கருமமாற்றி பலவித செல்வ சுக போகங்களை அனுபவித்து வாழ்ந்த ஒருவர், இவையெல்லாம் நிலையற்றவை, பிறவிப் பயனையடைய ஒவ்வாதவையெனும் நல்லுணர்வெய்தி, இறையருள் உந்தச் சிவதொண்டே சிறந்ததெனத் தெளிந்து, உள்ள சௌகரியங்களைத் துறந்து ‘‘கொட்டில்’’ ஒன்றமைத்து அதில் உறைந்து, கேதீச்சரநாதன் கோயிற்றிருப்பணியிலேயே முழு நாட்டமும் வைத்து உழைக்கச் செய்த திருவருளின் திறனை நினைந்து நினைந்து சைவ மக்கள் எல்லாரும் பெருமிதமுறலாம். சென்ற நூற்றாண்டில் சைவத்துக்கும் தமிழுக்கும் அளவிடற்கரிய பணியாற்றிய ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரவர்களால் ஆரம்பிக்கப்பட்ட இத்திருத்தொண்டை ஓர் அளவுக்கு நிறைவேற்றும் பாக்கியம் இவ்வன்பருக்குக் கிடைத்தது. இப்பெரிய தொண்டர்க்கு நாம் செய்யும் கைமாறு ஏதும் உண்டெனில், அது அவர் முற்றுவிக்க முயன்ற இத்திருக்கேதீச்சரக் கோயிற் புனருத்தாரணத் திருப்பணியைத் தொடர்ந்து செய்து முழுமை பெறச் செய்வதேயாகும்.

## தேவருலகறியாயோ நீ!

சேர்வைத் தியநாதன் சேவைகளைச் செய்தற்கு
யார் ஒருவர் இங்கே இருக்கின்றார்—பார்மிசையே
மிக்க திறலுடையார் மின்னி மறைகின்றார்
எக்குறையீ தென்றறிவார் யார்!

— பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை

திருநீறும் ஐந்தெழுத்துந் திகழ்வுறவே
திருத்தொண்டு செய்து வந்தாய்
குருமார்கள் குறைதீரக் குருகுலத்தை
அமைத்துதவிக் குருக்கள் தந்தாய்
பெருமானார் உறைகோயில் பலதந்து
பெருமையுறப் பரவி நின்றாய்
இருள்தீர இந்துமா மன்றமதை
இலங்கையிலே இணைத்து வைத்தாய்.

— பண்டிதர் செ. பூபாலபிள்ளை

நல்லறங்கள் நாட்டியுளோர் நம்பரடி
யாரெனவே நவில்வர் மேலோர்
இல்லறமும் பல்லறமும் எழிலாகக்
கொண்டுள்ள எம்மான் நீயும்
பல்லறங்கள் செய்வதற்கோ பாரிதனை
விட்டகன்றாய் பகர்தற் பாற்றோ?
சொல்லறமொன் றேனுமிலாத் தொல்லுலகம்
தேவருல கறியா யோநீ?

— வித்துவான் அம்பை இரா. சங்கரன்

# உலக மேடை

“யதார்த்தன்”

## இந்தோனேஷியா - இந்தியா

தென்கிழக்காசியாவிலேயே புரியாத புதிராக விளங்கும் ஒரே நாடு இன்று இந்தோனேஷியாதான்.

இந்தோனேஷியாவில் பல மாதகாலமாக நடந்த கிளர்ச்சிகள், ஆர்ப்பாட்டங்கள், குழப்பங்களின் பின் மந்திரி சபை மாற்றம், அதிகார மாற்றம், கொள்கை மாற்றம் முதலிய ‘மாறுதல்கள்’ ஏற்பட்டன. இதன் பயனாக சென்ற சில வாரங்களாக அங்கு அமைதி நிலவியது. ஆனாலும் அங்கு இன்னும் நிலைமை மாறவில்லை. பூரண அமைதியும் ஏற்படவில்லை.

நேற்று முன்தினமும் அதற்கு முதல் நாளும் அங்கு ஆர்ப்பாட்டங்களும் கிளர்ச்சிகளும் நடைபெற்றன. அதிபர் சுகர்ணோவின் ஆதரவாளர்களுக்கும், கம்யூனிஸ்ட்டுகளுக்கும் கம்யூனிஸஎதிர்ப்பு மாணவர்களுக்குமிடையில் மீண்டும் கைகலப்பு ஏற்பட்டு’ இக்கலகத்தை அடக்க பொலிஸார் துப்பாக்கிப்பிரயோகம் செய்ததில் ஒருவர் மாண்டதும், இதன் விளைவாக ஆர்ப்பாட்டங்களும் கிளர்ச்சிகளும் அதிகரித்திருக்கின்றன.

இந்தோனேஷியா இன்று குழப்பம் நிறைந்த, அமைதியற்ற, ஒரு நாடாக நிற்கிறது.

இந்தோனேஷியாவின் அதிபர் டாக்டர் சுகர்ணோ. இந்தோனேஷியாவின் விடுதலைக்காக, டச்சுக்காரரின் பிடியிலிருந்து நாட்டை விடுவிப்பதற்காக முன்னின்று உழைத்தவர்; போராடியவர்; தியாகங்கள் பல செய்தவர்; செயல்வீரர்; தீரர்; மக்களின் உணர்ச்சியைத்தட்டி எழுப்பக்கூடிய சிறந்த பேச்சாளர். இந்தோனேஷியா விடுதலை பெற்றபின் அதன் அதிபரான டாக்டர் சுகர்ணோ படிப்படியாக அதிகார ஆசைகொண்டார். உல்லாச, சல்லாப வாழ்க்கையில் மோகங்கொண்டார். மக்களின் வாழ்க்கை நலனை மெதுமெதுவாக மறந்தார். நாட்டின் பொருளாதார விருத்தியிலிருந்த அக்கறையை மறந்தார். அதிகார ஆசை சர்வாதிகாரப் போக்கிற்கு வழிகாட்டியது. கூடா நட்புக்கொண்டார். அயல் நாடுகளுடன் நட்புறவை முறித்துக்கொண்டார். பகைமையை வளர்க்கத்தொடங்கினார். இந்தோனேஷியாவின் ஆயுட்கால ஜனாதிபதியானார்.

என்னதான் தீரரானாலும் தியாகியானாலும் தங்கள் நலனிலும், தாய் நாட்டின் அபிவிருத்தியிலும் அசட்டை செய்யத்தொடங்கிய அதிபர் மீது மக்கள் எத்தனை நாளைக்கு அன்பும் ஆதரவும்கொண்டிருப்பர். அதிபரின் நடவடிக்கையை ஆட்சேபிக்க ஆரம்பித்தனர். மக்களின் ஆட்சேபம் ஆர்ப்பாட்டமாகமாறி, அது பெரும் கிளர்ச்சியாக உருவெடுத்து பெரும் குழப்பம் ஏற்பட்டது. ஆட்சிபீடம் ஆட்டம்கண்டது. அதிபர் சுகர்ணோ தன்போக்கை மாற்றிக்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் தோன்றியது.

இந்தோனேஷிய இராணுவத்தளபதி ஜெனரல் சுஹார்ட்டோ தோன்றினார். இதர சிலநாடுகளைப்போன்று அவர் அமர்க்களப்படுத்தவில்லை. அமைதியாக செயலாற்றத்தொடங்கினார். இந்தோனேஷியாவின் கொள்கையை வகுக்கும் சபையான மக்கள் ஆலோசனைச் சபையின் ஆதரவுடன் கம்யூனிஸ்ட்டுகள் இடம்பெறாத மந்திரிசபையொன்றை ஜெனரல் சுஹார்ட்டோ அமைத்தார். சுகர்ணோவின் ஆயுட்கால ஜனாதிபதி பதவி நீங்கி அடுத்த தேர்தல்வரை ஜனாதிபதியாக இருக்க ஒப்புக்கொள்ளப்பட்டது. மலேஸியாவை நசுக்கும் சுகர்ணோவின் கொள்கை கைவிடப்பட்டு மலேசியாவுடன் [illegible] நட்புறவு ஏற்படுத்தப்பட்டது.

ஆனால் இத்தனை நடவடிக்கைகளின் பின்னரும் டாக்டர் சுகர்ணோ, சந்தர்ப்பம் ஏற்படும்போதெல்லாம், ‘‘நான்தான் ஜனாதிபதி, நானே பிரதமர், ஜெனரல் சுஹார்ட்டோ உட்படமந்திரி சபையினர், அனைவரும் எனது உதவியாளர்களே’’ என்று சொல்லத்தவறுவதில்லை. அவருக்கு அழுகையும் ஆத்திரமும் கூடவந்துவிடுகிறது. மலேசிய-இந்தோனேஷிய சமாதான ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட சிறிதுநேரத்துக்குள்ளே மே ‘‘அது (மலேசியாவை நசுக்குவது) போர்னியோவின் அடுத்த தேர்தல் முடிவைப் பொறுத்திருக்கிறது. அந்த நிபந்தனையுடன்தான் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது என்று சுகர்ணோ தெரிவித்தார். (சுகர்ணோவுக்கு அதிகாரம் இல்லை. இந்தோனேஷிய ஆட்சி ஜெனரல் சுஹார்ட்டோவின் கையில் தானே இருக்கிறது என்று மலேசிய வெளிவிவகார அமைச்சு சமாதானம் கூறியது.)

இந்தோனேஷிய அரசியல் அமைப்பின்படி அதிபர்தான் எந்த ஒப்பந்தத்தையும், மந்திரிசபையின் தீர்மானத்தை அங்கீகரிக்கவேண்டும்

இந்தோனேஷிய சுதந்திர தினத்தில் சுகர்ணோ நிகழ்த்திய ஆக்ரோஷமான பேச்சு இந்தோனேஷியர்களுக்கு ஆத்திரமூட்டியுள்ளது. அதன் விளைவுதான் மீண்டும் மாணவர் ஆர்ப்பாட்டமும் கிளர்ச்சியும் ஏற்பட்டிருப்பது சுகர்ணோவுக்கு ஆதரவாக கம்யூனிஸ்ட்டுகளும் ஆர்ப்பாட்டம் நடத்துகின்றனர்.

சுகர்ணோவின் அதிகாரம் நிலைக்குமா? இனியும் ஜெனரல் சுஹார்ட்டோ அமைதியாகத்தான் செயலாற்றுவாரா? மிக விரைவில் இதற்கான விடைகள் தெரிந்துவிடும் என எதிர்பார்க்கலாம்!

★

### இந்தியா

ஆசியாவிலேயே மிகப் பெரிய ஜனநாயக நாடாக விளங்குவது இந்தியா. அதற்கு வெளி நாடுகளில் ஆபத்தும் நெருக்கடியும் எதிர்பார்த்துக்கொண்டிருக்கின்றன. இதே சமயம் இந்தியாவின் உள்ளேயும் இந்திய அரசாங்கத்துக்கு அடிக்கடி தொல்லைகள் ஏற்படுகின்றன.

மாகாணங்களுக்கிடையில் எல்லைக் கிளர்ச்சிகள், உணவுப் பற்றாக் குறையை எதிர்த்து ஆர்ப்பாட்டங்கள், தனிராஜ்யக் கோரிக்கை, மலைஜாதியினர்கலகம், சர்வகலாசாலை மாணவர் ஆர்ப்பாட்டம், மொழிக் கிளர்ச்சி இத்தனையும் இந்தியாவின் பல்வேறு ராஜ்யங்களிலும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. பலாத்காரச் செயல்களின்மூலம் தனியார் சொத்துக்களுக்கும் அரசாங்கச் சொத்துக்களுக்கும் பெரும் சேதம் ஏற்பட்டுள்ளன.

காந்திஜி காட்டிய அகிம்சைவழி இந்தியா விடுதலை பெறுவதற்குக் காரணமாக இருந்தது. பெற்ற சுதந்திரத்தைப் பேணிக் காக்க அகிம்சை முறையைப் பின்பற்றுவதே நியாயமாகும். ஆனால் எல்லாப் பிரச்னைகளுக்கும் வன்முறைச் செயல்கள்மூலம் தீர்வு காணச் சிலர் செய்யும் முயற்சிகளைக் கண்டு தலைவர்கள் வேதனையடைகின்றனர். சென்ற 15-ந் திகதி இந்திய சுதந்திர தினத்தன்று இந்திய ஜனாதிபதி டாக்டர் ராதாகிருஷ்ணனும் பிரதமர் திருமதி இந்திரா காந்தியும் நிகழ்த்திய உரையில் இந்த வேதனை தெளிவாகத் தெரிந்தன.

வெளியாரின் ஆபத்து நேர்ந்திருப்பதால் தேசிய ஒருமைப்பாட்டைப் பாதுகாக்கவேண்டுமென்பதில் இந்திய அரசாங்கம் ஆர்வமும் அக்கறையும் கொண்டுள்ளது. எதிர்க் கட்சியினரைப் பொறுத்தவரையில், பெரும்பாலும் அடுத்த தேர்தலைப்பற்றியே அதிக அக்கறை கொண்டுள்ளனர். ஆளும் கட்சியினருக்கும் அடுத்த தேர்தலில் அக்கறையில்லை என்று கூறமுடியாதென்பதும் உண்மையே. ஆயினும் நாட்டுக்கும், நாடு பல தியாகங்கள் செய்து பெற்ற சுதந்திரத்தைப் பாதுகாப்பதற்கும் ஆளும் கட்சியினருக்கு உதவியும் ஒத்துழைப்பும் அளிக்க வேண்டியது இதர கட்சியினரின் கடமையும் பொறுப்புமாகும். இங்கிலாந்திலும் மற்றும் ஜனநாயக நாடுகளிலும், நாட்டுக்கு வெளியார் ஆபத்து ஏற்படும்போது, சகல கட்சிகளையும் கூட்டி நாட்டைப் பாதுகாக்கவும் உள்நாட்டில் அமைதியை ஏற்படுத்தவும் வழிவகுக்கப்படுவதுண்டு. அவசியமேற்பட்டால் சகல கட்சிகளையும் கொண்ட தேசிய அரசாங்கம் அமைப்பதும் உண்டு. ஆனால் இது இந்தியாவில் சாத்தியமாகுமா?

இந்தியப் பார்லிமெண்டில் சமீபகாலத்தில் காணப்படும் ஒழுங்கற்ற நிலைமையும் இந்திய நாட்டின் பாரம்பரியத்துக்கும் பண்பாட்டுக்கும் பெரும் சோதனையாக இருக்கிறது. ஜனாதிபதி டாக்டர் ராதாகிருஷ்ணன், தமக்குச் சந்தர்ப்பம் கிடைக்கும்போதெல்லாம், தேர்தலுக்கும் போட்டிக்கும் நிறுத்தும் அபேட்சகர்களைத் தெரிவு செய்யவேண்டிய முறைபற்றியும் தங்கள் பிரதிநிதிகளை மக்கள் ‘அளந்து’ தெரிவு செய்யவேண்டியது பற்றியும் அறிவுறுத்திவருகிறார். ஆளும் கட்சியான காங்கிரஸ் அடுத்த தேர்தலுக்கு தனது அபேட்சகர்களைத் தெரிவு செய்வதில் இதற்கு வழிகாட்டுமா?

° ° °

தேர்தல் அபேட்சகர் என்றதும் இந்தியாவின் முன்னாள் பாதுகாப்பு மந்திரி திரு. வி. கே. கிருஷ்ணமேனன் நினைவு வருகிறது. சென்ற பொதுத் தேர்தலில் பம்பாய் வடக்குத் தொகுதியில் காங்கிரஸ் அபேட்சகராக திரு. மேனன் போட்டியிட்டு

(10ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இவ்வாரச் சிறுகதை

# கனவு

— கைதடியூர் கந்தராசன் —

ஒரே மிண்டில் வள்ளத்தை கரைக்குக்கொண்டு வந்து சேர்த்த கந்தன் நிமிர்ந்து பார்த்தான். குடிசை அந்த அமாவாசை இருட்டில் கருங்குரங்கு போல, குந்தி இருந்தது. வள்ளத்துள் இருந்த மீன்களையும், வலையையும் மீன் சங்கத்திடம் ஒப்படைத்த கந்தனுக்கு பசியின் அகோரம் வாட்டியெடுத்தது. நேரம் எட்டோ, ஒன்பதோ என்பதை அவனால் மட்டும் பிடிக்கமுடியவில்லை. காலை தொடக்கம் கடலுடன் போராடிய களைப்பு அவனது முகத்தில் வாட்டத்தை உண்டுபண்ணியிருந்தது. தலையில் கட்டியமுண்டாசை எடுத்து அரையில் கட்டிக் கொண்டான்.

அந்தப்பூமி ஏழை மீனவர்களுக்கென்றே ஒதுக்கப்பட்ட இடம் அங்கொன்று மிங்கொன்றுமாக பத்துப் பதினைந்து குடிசைகள்தான் அந்தப் பூமியை அரசு செலுத்திவந்தன.

மீனவர்களுக்கு வாழ்வளிக்க முயலும் மீன்சங்கம், அதற்கு அருகே காசநோயாளர் வைத்தியசாலை, நூறுயார் தொலைவிலப்பால் உள்ள விளையாட்டுமைதானம், மறு கோடியிலுள்ள குருடர் செவிடர் பாடசாலை - இவைகளே அந்தப் பொட்டல் வெளியைச்சுட்டிக் காட்டிக்கொண்டிருந்தன.

மீன் சங்கத்துக்கும் காசநோயாளர் வைத்தியசாலைக்குமிடையே உள்ள மணல் ஒழுங்கையில் சொறி நாய்களின் குரைப்பையும் பொருட்படுத்தாமல் விறுவிறு என்று நடக்கத்தொடங்கினான் கந்தன் வலையைவலித்துவலித்துச்சோர்ந்துபோன அவனது கைகள் மகனுக்காக நாகமுத்து கடையில் வேண்டிய சுண்டல் கடலையை ஒருமுறை தடவிப்பார்த்துக்கொண்டது.

அவனது வாய் மெல்ல முணுமுணுத்தது. புதுத்தெம்புடன் நடந்த கந்தன் தனது குடிசையின் வாயிலில் வந்து நின்றான்.

கதிரி—! கதிரி......! மெல்ல அழைக்கிறான்.

''என்ன மச்சான், இவ்வளவு நேரம்'' என்று கேட்டபடி புகட்டில் வைத்த நெருப்புப்பெட்டியை எடுத்துப் போத்தல் விளக்கைக் கொளுத்திய கதிரி, தட்டிப் படலையை அவிழ்த்துத்திறந்தாள்.

குடிசைக்குள் தனது உடம்பை நெளி துவளைத்து உள்ளே சென்ற கந்தனுக்கு சுண்டவைத்த சுருக்குளாம் பின் மணம் அவனது பசியை மேலும் தூண்டிவிட்டது.

சுருக்குளம்புடன் சட்டி நிரம்பிய வெள்ளை அரிசிச் சோற்றையும் குழைத்துச் சுவைக்கத்தொடங்கிய கந்தனுக்கு அது தேவாமிர்தமாக இருந்தது.

''இன்று அந்தக் கிளாக்கரைக்கண்டியா மச்சான்?'' -நிசப்தத்தைக் குலைத்தாள் கதிரி.

''என்ன கதிரி! உனக்கு எத்தனை தரம்தான் சொல்லுவது; அந்தக்கிளாக்கர் 275 உருவா தந்தால் எப்படியும் அங்கை இடமெடுத்துத் தாறதாய்ச் சொன்னார். எப்படியோ கயிட்டப்பட்டு 200 உருவா சேர்த்துப்போட்டன். மிச்சம் சேர்க்கிறதெண்டால் இலேசான காரியமே வாற கிழமை அவர் வரச்சொன்னவர். உன்ரை கழுத்திலை கிடக்கிற அச்சிரத்தைத் தரச் சொன்னால் நீ மாட்டன் எண்ணிறாய் நான் என்ன செய்ய? என்னை என்ன களவெடுக்கச் சொல்லிறியே?''

''எனக்குமாத்திரம் நீலன் வேலையில்லாமலிருக்கிறது விருப்பமில்லையே இந்த அச்சிரத்தை அடைவுவைச்சால் ஒரு அந்தரத்துக்கு ஒண்டுமில்லையே எண்டுதான் சொன்னனான். நீ ஏன் மச்சான் கோவிக்கிறாய்? நாளைக்குக் கொண்டுபோய் அடைவை வைச்சுப்போட்டு காசை வேண்டிவாவன். ஆனா மச்சான் ஒண்டுமட்டும் சொல்லுறன். அந்தக் கள்ளுக்கொட்டில் கறுத்தானிட்டை மாத்திரம் முந்தி வைச்சமாதிரிக் கொண்டுபோய் அடைவை வையாதை. அவன் ஒண்டாயிருந்து கழுத்தை அறுப்பான். அவனுக்கு மற்றவை வாழுறது எப்பனும் புடியாது.''

அவளது வெற்றிலை போட்ட சிவந்த உதடுகளிலிருந்து வெளிவந்த சத்தம் நீரிலிடப்பட்ட கல்லாய் அமிழ்ந்துபோனது.

சாப்பிட்ட வாயை அலம்பிய கந்தன் நேரே கள்ளிப்பெட்டி இருந்த மூலைக்குப் போனான்.

சுருட்டிக் கொடியிலே போடப்பட்ட சில கந்தல் துணிகள், அடுக்கிவைக்கப்பட்ட நான்கைந்து பானை சட்டிகள், மூலையில் லாவகமாகச் சாத்து வைக்கப்பட்ட நான்கைந்து பீற்றல் ஓலைப் பாய்கள்; மங்கி மங்கி எரியும் ஒரு போத்தல் விளக்கு- இவைகளே அந்தக் குடிசையில் கொலுவீற்றிருந்தன.

''முப்பது—! நாப்பது—!! ஐம்பது—!!!''

ஐஞ்சைந்து பத்து ரூபா நோட்டுகளை கள்ளிப்பெட்டியிலிருந்து எடுத்து கசங்கலை நீக்கி எண்ணத்தொடங்கினான். குடுபுப்பிடித்துப்பிடித்து மரத்துப்போன அவனது கைகளுக்கு அவை மகிழம்பூப்போல இதமளித்தன திரும்பவும் பத்திரமாக அவைகளை கள்ளிப்பெட்டியில்வைத்தவன், ஏதோநினைவுவந்தவனைத் தனது மடியை ஒருமுறை தடவிப்பார்த்தான். அப்பொழுதுதான் கடையில் வாங்கிய சுண்டல் கடலையின் ஞாபகம் அவனுக்குவந்தது இறுக்கிமுடிந்துவைக்கப்பட்ட சுண்டல்கடலையை அவிழ்த்துகதிரியிடம் கொடுத்த கந்தன், பாயின்மேல் கந்தல்துணியை விரித்துவிட்டு தன் உடலைச் சாய்த்துக்கொண்டான்.

கதிரியும் போத்தல் விளக்கை அணைத்துவிட்டு படுத்துக்கொண்டாள். நீலனும் அவளும் பாயில் அயர்ந்து தூங்கிக்கொண்டிருக்கின்றனர்.

ஆனால் அவன் மட்டும்...? உடம்பு களைத்துத்தான் இருக்கிறது. ஆனால் அவனது உள்ளம் மட்டும்? மகனது நல்வாழ்வுக்கு அடிகோல எண்ணமிட்டுக்கொண்டே இருக்கிறது. அவனது எண்ணச்சூழல்கள் நினைவுப்பரப்பின்மேலே சுற்றிக்கொண்டிருக்கிறது. கந்தன் கந்தனுடனேயே பேசினான்.

## (2)

லொள்......! லொள்......!

தெருவில் குட்டை நாய்களின் குரைப்பு அவனது எண்ண அலைகளை அகற்றிவிடுகிறது. புரண்டு படுத்தான் கந்தன். காசநோயாளர் ஆஸ்பத்திரியிலிருந்து வந்த மங்கிய வெளிச்சத்தில் நீலனது முகம் மங்கலாகத்தெரிந்தது. நீண்டதொரு பெருமூச்சை வெளிவிட்டுவிட்டுத் தொடர்ந்து எண்ணக்கடலுள் மூழ்கினான்.

கறுத்தானிடம் கதிரியின் அச்சிரத்தை அடகு வைத்து 75 உருவாவேண்டிவிட்டால் அந்தப் பள்ளிக்கூடக்கிளாக்கர் ஐயாகேட்ட தொகையை எப்பிடியும் கொடுத்திடலாம் நீலனைப் பள்ளிக்கூடத்திலும் சேர்த்துவிடலாம். அங்கையிருக்கிற விடுதியிலும் இருப்பதற்கு நீலனுக்கு இடமெடுத்துத் தருவதாய்ச் சொன்னாரே. அவர் காசைத்தான் வேண்டினாலும் அவர் எவ்வளவு நல்லவர். இந்தக் காலத்திலை இப்படி ஆர்தான் ஏழையளுக்கு உதவி செய்யினம். அவர் மவராசனாய் இருக்கவேணும்

அவன் கறுத்தானும் தன்ரை பொடியனுக்கும் இந்த இடத்திலை தானும் இடம் எடுத்ததெண்டு சொன்னவன். அவனும் ஆரைப்பிடிச்சோ இடம் எடுத்துப்போட்டான். ... நல்லது. அவனும் தாயே

மேரி...! நீயேதான் நீலனை நல்லாய் வருவதற்கு உதவவேணும்

நினைவுச் சலனங்களினாலே நெஞ்சில் உளலும் நினைவுகள் அவனது உடம்புச்சோர்வினாலே உறக்கத்தில் நீங்கி விடுகிறது.

## (3)

சாமக்கோழி குரலெடுத்துக் கூவுகிறது. பாயை வாரிச்சுருட்டிக் கொண்டு எழுந்த கந்தன் மூலையில் கதிரிமூட்டிவிட்ட தண்ணீரிலிருந்து எழும்பிய தக, தக ஓசையே கேட்டான். ஏன்... அவனது உள்ளமே தகதகத்துக்கொண்டுதான் இருக்கிறதே!

சுருட்டிவைத்தவேட்டியை எடுத்துக் கட்டிக்கொண்டு நடந்த கந்தனுக்குநடையில் ஒருவிறாறு புஏற்பட்டது.

ஃ ஃ ஃ

முற்றத்திலே பல் துலக்கிக்கொண்டிருந்த கறுத்தான், கந்தனைக்கண்டவுடன் ஒரு புன் சிரிப்பை உதிர்த்துவிட்டு ''என்ன கந்தண்ணை, காத்தாலை வெள்ளண என்னட்டை வாறாய். அதுசரி, உன்ரை பொடியன்ரை விஷயம் எப்பிடிக் கிடக்குது. அண்டைக்கு அந்தக் கிளாக்கர் என்ன சொன்னவர். அவருக்கு காச இளக்கிவிட்டால்தான் விசயம் ஒப்பேறும்'' என்று தனது காவிப் பல்லுத்தெரியும்படி கதையை அளந்துகொண்டு போனான் கறுத்தான்.

''சரி, சரி, கறுத்தான், எனக்கு உன்னோடை பறைய நேரமில்லை. இந்த அச்சிரத்தை வைச்சுக்கொண்டு எழுபத்தைந்து உருவா தா. நானிப்ப நேரை கிளாக்கரட்டைப்போய் அவரைக் கண்டு கதைச்சுப்போட்டு இதையும் குடுத்திட்டுத் தான் கடலுக்குப்போகவேணும். இஞ்சை மடியுக்கை இருநூறு உருவா கிடக்கு நீ தாற எழுபத்தைந்து உருவாவையும் சேர்த்துக் குடுத்துட்டால் ஒருமாதிரிப் பாத்திடலாம்.''

''போயும் போயும் நீ என்னட்டையே வந்து கேட்கிறாய்...? சரி... சரி.. ஒரு நல்ல காரியத்துக்கு கேக்கிறாய். அதிகின பொறுக்கிக் கிறுக்கித்தாறன். எண்டாலும், இந்த ''லஞ்சம்'' கொடுக்கிறது பெரியபிழையண்ணை. அண்டைக்கும் ஒருதனைப்பிடிச்சு அடிச்சுப் போட்டாங்கள். குடுக்கேக்கை கவனம்.''

காசும், அச்சிரமும் கைமாறின. கந்தன் நேரே கிளாக்கர் வீட்டைநோக்கிப் போகிறான்.

## (4)

வீட்டு விறாந்தையிலே சுருட்டை வைத்துப் புகைத்துக் கொண்டிருந்தகிளாக்கர் கந்தனைக்கண்டதும் குசலப் விசாரிக்கத்தொடங்கிவிட்டார்.

''என்னகந்தன்...! உன்ரை விசயமாய்த்தான் இண்டைக்கு மனேச்சரோடை கதைச்சனான். அவர் கதைக்கிறமாதிரியிலை இருந்து இடம் கிடைக்கும்போலை தான் கிடக்குது. அவர்தான் என்ன செய்யிறது? எத்தினை விண்ணப்பங்கள் கிடக்குது எல்லாம் பெரிய பெரிய ஆட்களின்ரை பிள்ளையளுடையது. உன்ரை விசயத்திலை நான் அவரோடை இறுக்கமாய்த்தான் கதைச்சனான் இடம் கிடைச்சு மகன் உத்தியோகத்திலை இருந்திட்டானெண்டால் என்னை எங்கை கவனிக்கப்போறாய்?''

''இல்லை ஐயா...! நீங்கள் இந்தக் கயிட்டத்துக்குள்ளையும் எனக்குச் செய்யிற உதவியை மறப்பனே. நீங்கள் எனக்குத் தெய்வம்மாதிரி. அதுசரி நீங்கள் கேட்ட ''இதை'' வைச்சுக் கொள்ளுங்கோவன் நானிஞ்சை வந்துபோனது ஒருவருக்கும் தெரியக்கூடாது. பிறகு குட்டிச்சுவராக்கிப்போடுவங்கள்.''

கிளாக்கர் புன் சிரிப்புடன் கந்தன் கொடுத்த தொகையைப் பெற்றுக்கொண்டு, ''அப்பசரி கந்தரே! நான் எல்லாம் மனேச்சரோடை கதைக்கிறன் நாளைக்கு நீலனைக் கந்தோருக்கு வரச்சொல்லு ...! எல்லாம் வெற்றிதான்.

ஒருமுறை பல்லைக்காட்டிவிட்டுப் படலையை விட்டு வெளியேறிய கந்தன் திடுக்குற்றான்

இரண்டுமூன்று 'பொலிஸ்', கள்ளுக்கொட்டில் கறுத்தான ஆகியோர் கந்தனின் அருகே அவனைநோக்கிவந்து கொண்டிருந்தனர்

''நீ இப்பொழுது ''லஞ்சம்'' கொடுத்த குற்றத்திற்காக நானுன்னை சட்டப்படி கைதுசெய்கிறேன். கறுத்தான் சொன்ன வாக்குமூலத்துடன் இப்பொழுது நீ கொடுத்ததை நாம் நேரே கண்டிருக்கிறோம்.''

மூச்சுவிடாமல் பேசிமுடித்தார், பொலிஸ் இன்ஸ்பெக்டர்.


அவனுக்கு இந்த உலகமே அந்தகார இருளில் மூழ்கியது போல் தோன்றியது. ஒருமுறை கறுத்தானை நிமிர்ந்து பார்த்த கந்தன், தன் கனவு பலிக்கவில்லையே என்ற கவலையுடன் பொலிசின் பின்னால் நடக்கத்தொடங்கினான். (யாவும் கற்பனை)

### 'ஜீ'யன் வரலாறு

ஐயா, மாத்தையா, ஜனாப், ஸ்ரீ, மிஸ்டர் என்பவையெல்லாம் மரியாதையைக் குறிக்கும்சொற்கள்- செல்வநாயகம் ஐயா, சேனநாயக்கா மாத்தையா, ஜனாப் மூகம்மது, ஸ்ரீ பக்தவத்சலம், மிஸ்டர் ஜோன்ஸ்டன் என்றவாறு. வடஇந்தியாவில் மரியாதையைக் குறிக்கும் சொல் 'ஜி' என்பது-காந்திஜி, நேருஜி, நேதாஜி என்றவாறு.

'ஜி' என்பது 'ஆர்ய' என்ற வடமொழிச்சொல்லிலிருந்து வந்தது இதுவே பின்னர் பேச்சு வழக்கில் 'ஆஜ்ஜா' வாகி சுருக்கமாக 'ஜி' என்று மாறியது.

இந்த விளக்கத்தை காலஞ்சென்ற நேருஜி தமது 'சுயசரிதை'யில் தந்திருக்கிறார்.




ST. ANTHONY'S HARDWARE STORES LTD

516. SKINNERS ROAD SOUTH, COLOMBO 10.

சென்ற் அந்தோனிஸ் குறூப்

516, ஸ்கினேஸ் வீதி, தெற்கு, கொழும்பு—10.

டெலிபோன்: 4261
4262.



# விடுதலை விண்ணப்பம்

—5—

**47. பிறைக்கலஞ் சேர்தரு தாரவன்**

பழிப்பில்நின் பாதப் பழந்
தொழும் பெய்தி விழப்
பழித்து
விழித்திருந் தேனை விடுதி
கண் டாய்வெண் மணிப்
பணிலத்
தொழித்துமத் தாரமந்
தாலினி நுந்தும்பந் தப்
பெருமை
தழிச்சிறை நீரிற் பிறைக்
கலஞ் சேர்தரு
தாரவனே.

இழுதற்கு இடமில்லாத பழைமையான உம்திருவடித் தொண்டில் ஈடுபட்டுப் பிறகு அந்தத்தொண்டினின் றும் வழுவி உம்மை இகழ்ந்து செய்வதறியாது விழித்துக் கொண்டிருந்த என்னை விட்டு விடாது காத்தருளுக. முத்துக்களையும் சங்குகளையும் ஒதுக்கிக்கொண்டு ஆகாய கங்கை ததும்பும்படி தடைப்பட்டுள்ள பெருமைவாய்ந்த கங்கை நீரில் பிறைச்சந்திர னாகிய மரக்கலம் மிதக்கும் சிரத்தில்வெற்றிமாலை சூடிய பெருமானே! அடியேன் உன் அடைக்கலம்.

**48. அரைப்பூண் வீரன்**

தாரகை போலுந் தலைத்
தலை மாலைத் தழலரப்
பூண்
வீரஎன் தன்னை விடுதி
கண் டாய்விடி லென்னை
மிக்கார்
ஆரடி யானென்னின்
உத்தர கோசமங்கைக்கரசின்
சீரடி யாரடி யானென்று
நின்னைச் சிரிப்பிப்பனே.

நட்சத்திரங்களைப் போல பிரகாசிக்கும் பிரம கபால

க. வை. ஆ. சர்மா

மாலைகளையும் நெருப்பைப் போலும் கொடிய விடத்தை யுடைய பாம்புகளையும் ஆபரணமாக அணியும் வீரம்பொருந்திய பெருமானே! தமியேனைக் கைவிடாதீர். கைவிடுவீராயின் அறிவான்மிக்க பெரியோர் என்னைப்பார்த்து நீர் யாருடைய அடியவன் என்று வினவுவராயின் திருவுத்தர கோசமங்கைத்தலத்து அரசு வீற்றிருக்கும்பிரானது சிறப்பான அடியார்களது அடிமை யாவேன் என்று சொல்லி அவர்கள் உம்மைப் பார்த்து நகைக்கும்படி செய்வேன். அடியவனைக் கைவிடுதல் பழிப்பிற்கு இடமாகு மன்றோ.

**49. வெங்கரியின் உரிப்பிச்சன்**

சிரிப்பிப்பன் சீறும்
பிழைப்பைத் தொழும்
பையும் ஈசற் கென்று
விரிப்பிப்ப னென்னை
விடுதிகண் டாய்விடின்
வெங்கரியின்
உரிப்பிச்சன் தோலுடைப்
பிச்சன் நஞ்சூண்பிச்சன்
ஊர்ச்சுடுகாட்(டு)
எரிப்பிச்சன் என்னையும்
ஆளுடைப் பிச்சனென்
றேசுவனே.

வெறுக்கத்தக்க என் வாழ்க்கையைப் பெரியோர் கண்டு நகைக்கும்படி செய்வேன். எனது தொண்டும் ஈசனுக்கே என்று யாவரும் அறியும்படி பரவச் செய்வேன் தமியேனைக் கைவிடுவீராயின் கொடிய யானையின் தோலை உரித்துப் போர்த்த பித்தனென்றும், புலித்தோலை ஆடையாக உடுத்தபித்தனென்றும், கொடிய ஆலகாலம்என்னும் நஞ்சையுண்ணும் பித்தன் என்றும், உலகுக்கெல்லாம் பொதுவான சுடுகாட்டில் கூத்தாடும் பித்தனென்றும் உம்மை ஏசுவேன்.

**50. செம்பவளவெற்பின் தேசுடையான்**

ஏசினும் யானுன்னை
யேத்தினும் என்
பிழைக்கே குழைந்து
வேசறு வேனை விடுதிகண்
டாய்செம் பவள
வெற்பின்
தேசுடை யாயென்னை
ஆளுடை யாய்சிற்
றுயிர்க்கிரங்கிக்
காய்சின ஆலமுண்
டாய்அமு துண்ணக்
கடையவனே

யான் உம்மை ஏசினு லென்ன, அதுவன்றி உம்மை ஏத்திப்போற்றித் துதித்தா லென்ன, அதனால் உமக்கு யாதொரு கவலையும் இல்லையே. யான் என் பிழைக்கு இரங்கித் துன்பப்படுகின்ற என்னை ஒருபோதும் கைவிடாது காத்தருளுக. செம்பவளத்திலுலாகிய மலையின் ஒளிவண்ணரே! தமியேனை ஆட்கொண்டருளிய பரம்பொருளே! கடையவனாகிய யான் போரானந்தமாகிய அமுதினை உண்ணும்படி என்போன்றசிறிய உயிர்கள் பொருட்டு இரங்கி ஆலகாலமாம் நஞ்சை அமுதாக உண்டருளியவரே! அடியேனது கோபம் முதலிய விஷத்தன்மைகளைப் போக்கியவரே! காத்தருளுவீராக.

குறள் விளக்கம்

## இன்றும் வருமோ?

--பொ. சண்முகநாதன்--

அவனோ உல்லாசம் என்றால் என்னவென்றறியாத ஓர் ஏழை. நாள் முழுவதும் தனது ஒரு சாண் வயிற்றுக்கு உணவு தேடி ஊரெல்லாம் அலைந்து திரிவான் எப்படித் திரிந்தாலும் அவனுக்கு மூன்று நேர உணவும் கிடைத்துவிடாது. சில நாட்களில் இரண்டுநேர உணவு கிடைக்கும். இன்னும் சில நாட்களில் ஒருநேரஉணவுதான்கிடைக்கும் ஒரு நேரஉணவுதானும் கிடைக்காத நாட்களும் உண்டு.

இதனால் அவன் வறுமையைப் பற்றி நன்கு தெரிந்திருக்கிறான். பசி என்றால் என்ன? பசிக்கொடுமை எப்படி எப்படியெல்லாம் உடலை வருத்தும் என்பதெல்லாம் அவனுக்குப்புரியும்.

அவன் உண்பதற்காக உயிர் வாழும் கூட்டத்தைச் சேர்ந்தவனல்லன். உயிர் வாழ்வதற்காக ஏதாவது உண்ணவேண்டுமே என்ற நிலையிலுள்ளவன். ஆனால் உண்ண உணவு எதுவும் கிடைக்காதபோது அவன் படும் துக்கம், துயரம், வேதனைகளோ சொல்லுந்தரமன்று! பசிகிடந்தவனுக்குத் தானே தெரியும் பசியின் கொடுமை? பசிக்கொடுமை வாட்டும் போது பேசமுடியாது கண் தெரியாது. நடந்தால் நடக்கமுடியாது படுத்தால் தூக்கம் வராது. இதுமட்டுமா தலைசுற்று, மயக்கம் வேறு வந்துவிடும். சும்மாவா சொன்னார்கள். 'பசி வந்திடப்பத்தும் பறந்துவிடும்' என்று.

நஞ்சுகூட கொஞ்ச நேர வேதனையைத்தான் தரும். விபத்துக்கூட கணநேரக் கொடுமையைத்தான் கொடுக்கும். அப்புறம் அடுத்த உலகுக்குப் போய் விடலாம். ஆனால் இந்தப் பசியோ மனிதனை ஒரேயடியாகச் சாகடித்துவிடாது. சிறுகச்சிறுகக் கொல்லாமல் கொல்லும் இயல்புகொண்டது.

இதனால்தான் அவனுக்குத் தினமும் விடிந்தால் முகம் களையிழந்து காணப்படுகிறது. நேற்று வந்து தன்னைக் கொன்றதுபோன்ற வறுமை இன்றும் வந்துவிடக்கூடாது எனக் கவலைப்படுகிறான். 'வந்துவிடுமோ' என அவன் கலங்கும்போது 'ஐயோ' அப்படி வந்துவிடக் கூடாதே' என்று எம்மையும் கலங்கும்படியாக அவ்வளவு உருக்கமாக வள்ளுவர் கீழேயுள்ள குறளை யாத்துள்ளார்.

"இன்றும் வருவது
கொல்லோ-நெருநலும்
கொன்றது போலும்
நிரப்பு."

# இ. போ. ச. பஸ்ஸில்

# ஒரு நெடுவழிப் பயணம்

(7)

மட்டக்களப்பு நகரை அழகுபடுத்தும் வாவி ஓரமாக பஸ் நிலையம் இருக்கிறது. நாங்கள் புறப்படும் சமயம் 'இன்றிரவு பூரணையல்லவா, மீன் பாடுவதைக் கேட்டுவிட்டுப்போகலாமே' என்றார் பிரயாண சகா.

"வேண்டாம். இன்னொரு சமயம் கேட்டுக்கொள்ளலாம். பஸ்ஸுக்கு நேரமாகி விட்டது. சினிமாத்தியேட்டர்களின் ஆரவாரம் அடங்கவே இராப் பன்னிரண்டு மணியாகுமே. அம்மட்டும் பஸ் நிற்கவா போகிறது?" என்று கூறிவிட்டேன். அவரும் நான் கூறியதை ஒப்புக்கொண்டு பஸ்ஸில் என்கூட ஏறிவிட்டார். பஸ்ஸில் இருந்தபோது ஒரு கதை சொன்னார். பாடும் மீனைப் பற்றிய கதைதான். அதாவது மீன்பாடுவதைக்கேட்கப்போன இரண்டுபேரைப் பற்றிய கதை. அந்தக் கதையை நீங்களும் கேளுங்கள்.

ஒரு பூரணைத்தினத்தன்று இரு நண்பர்கள் மட்டக்களப்பு வாவிக் கரையிலிருந்த ஒரு தியேட்டரிலே இரண்டாம் காட்சி படம் பார்த்துவிட்டு அதன்மேல் மீன்பாடுவதைக் கேட்பதற்காக கல்லடி உப்போடைப் பாலத்தில் போய் வெகுநேரம் காத்திருந்தார்களாம். இவர்களிலே ஒருவர் வெளியூர்வாசி. இரண்டு பேரும் பாலத்தின் மீது

— "காங்கேயன்" —

சரிந்து ஏரிப்பக்கம் கூர்மையாகக்காது கொடுத்துக்கேட்டவாறு படுத்திருந்தார்கள். ஒரு சாமப்பொழுதாக "அதோ அதோ உனக்குக் கேட்கிறதா மீன்பாடுவது?" என்றார் உள்ளூர் நண்பர்.

"ஆமாம் கேட்கிறது. வீணையில் தந்தி மீட்டுவது போல் அற்புதமாயிருக்கிறது. சத்தம்போடாமலிரு. தொடர்ந்துகேட்போம். என்றார் வெளியூர் நண்பர். மட்டக்களப்பு நண்பர் வாயை மூடிவிட்டார். அப்படியே சற்றுவேளையில் கண்களையும்மூடிவிட்டார். வெளியூர் நண்பர் தனித்திருந்து மீன் பாடுவதைக் கேட்டு ஆனந்திக்கலானார்.

மூன்றும் சாமமாகிவிடுக்கும் ஏதோயாரோஇரைந்து சத்தம்போட்டுப் பேசியது கேட்டு மட்டக்களப்பு நண்பர் கண்விழித்துக்கொண்டார்.

"என்ன நண்பரே, பாடும் மீனின் பாட்டு முழுவதும் கேட்டீரா? எப்படியிருந்தது?" என்று வினவினார்.

"அதை எப்படியப்பா சொல்வேன். தேவகானமோ கந்தர்வகானமோ அதைஎப்படி வருணிப்பதென்றே எனக்குத் தோன்றவில்லை. இந்தப் பூலோகத்தில் இப்படியும் ஒரு கானமா? வேறு எங்கே இதனைக்கேட்கப்போகிறோம். அடடா, அந்த மீனுதேவியின் கானமும் கவிதையும் ஆடலும் அழகும்—"

மட்டக்களப்பு நண்பர் திகைத்தார். பாடும் மீனைப் பார்த்தாரா அது ஆடியதைக் கூடக்கண்டதாக அல்லவா வர்ணித்துப் பரவசப்படுகிறார்! இதென்ன கூத்து. நாம் எக்காலத்திலும் கேள்விப்படாத விந்தையாயிருக்கே. ஒருவேளை, அன்றிரவு பார்த்த படத்தில் நடித்த மீனுகுமாரியைத்தான் கனவு கண்டுவிட்டு இப்படி உளறுகிறாரோ—என எண்ணிக் குழம்பிக்கொண்டிருக்கையில் வெளியூர் நண்பர் தொடர்ந்துசொன்னார்.

"நண்பரே, மட்டு நகர் வாசிகள் பெரும் புண்ணியம் செய்தவர்கள். இந்தவைய தெய்வீக கீதம் இசைக்கும் நீரரமகளிர் வாழும் இவ் ஏரி கூட ஒரு புண்ணிய தீர்த்தத்திற்குச்சமமானது. நடுச்சாமப்பொழுதாக நீரரமகளிர் ஒருத்தி ஒரு தோளியோடு பாலத்தைக் கடந்து சென்றபோது, அவள் அழகைப்பார்த்தேன். அடடா என்ன அழகு, என்ன அழகு. தாயே மீனாட்சி, மீனலோசனி! மீனுதேவி!"- தலையில் [illegible]

இவ்வாறு புலம்பினார் வெளியூர் நண்பர்.

மட்டக்களப்பு நண்பர் ஒன்றும் புரியமாட்டாதவராய் வெளியூர் நண்பரை அங்கிருந்து வீட்டுக்குக் கூட்டிக்கொண்டு போய்ச்சேர்த்துவிட்டார்.

மறுநாள் விடியற்காலை அவர்எழுந்துபார்த்தபோது அதிதியைக்காணவில்லை. அத்துடன் இன்னொரு புதினமும் கேள்விப்பட்டார். அவர் வீட்டுக்கு இரண்டு வீடு தள்ளி ஒரு வீட்டில் இராத்திரி படம்பார்க்கப்போன கல்லூரிக் குமாரி கமலாவையும் காணவில்லையாம். இதுவிஷயம் எங்கும் ஒரே பரபரப்பாகவிருந்தது. மட்டக்களப்பு நண்பர் தன்னிடம் வந்திருந்த அதிதியை யிட்டு இப்பொழுதுதான் கவலைப்பட்டார்.

கதையை இவ்வாறு கூறி முடித்தபோது பஸ்ஸில் எங்களுக்குப் பின்பக்கமாகவிருந்து களுக்கென்று ஓர் இளம்பெண்ணின் சிரிப்பொலி எழுந்தது. மட்டக்களப்பு வாவி மீன்களோ அல்லது ஊரிகளோதானும். மீன்கள் எப்படித்தான் அதிசயமாக ஆடினாலும், பாடினாலும் அவற்றுக்கு இத்தனை அழகாக சிரிக்கத் தெரியுமா என்று நினைத்தேன். ஆனால் உண்மையில் இன்னும் அதிசயம் என்னவானால் அப்படிச் சிரித்தது அந்தப்பாடும் மீனேதான்!

என் பிரயாணத்தோழருக்குத் தெரிந்த ஒரு காதல் ஜோடிதான் எங்களுக்குப்பின்னாலிருந்தார்கள். அவ்விருபேருமே நண்பர் கூறிய கதாபாத்திரங்கள். நடுவழியில் எங்கேயோ ஏறினார்களாம். அந்தப் பொல்லாத மட்டக்களப்புபாடும் மீனையும், அவளது புத்திசாலிக் காதலனையும்மனமாரவாழ்த்தினேன். காதில் ஒரு வெள்ளைக்குச்சி. அதற்குமேல் நகையலங்காரம் ஒன்றுமில்லை. ஆனால் அந்தக் குச்சி ஒன்றே அவளுக்கு எத்தனை எடுப்பாக இருக்கிறது! அவளுடைய காதல் காளை அதில்தான் தன் மனத்தை அவளிடம் இழந்திருப்பானோ? என்னவோ அதெல்லாம் நமக்கேன். காதலே ஒரு தேவ ரகசியம் என்று ஆன்றோர் கூறிவிட்டார்களே.

(தொடரும்)

## மெய் மறந்தது

--சேந்தன்--

மாலைநேரம் கோயில்மணி வானைத் துளைக்குது,
சோலை முல்லை கட்டவிழ்கத் துடிதுடிக்குது.

கொம்பர்மீது குயிலிருந்து கூவிக்களிக்குது
தம்புராவின் நாதஞ்சேர்ந்து தமிழிசைக்குது,

மாடம்மீது மயிலிருந்து ஆடிக்களிக்குது,
ஆடும்பிரான் கோழிக்கொடி அசைந்துஆடுது,

விண்ணைத்தாவி வானத்துச்சி விளங்கிக் காண்குது
எண்ணிக்காணு மக்கள்கூட்டம் இடித்துச்செல்லுது.

குடைகள்கொடி யாலவட்டம் நிரைகள்கட்டவே,
கொம்புமுதல் வாத்தியங்கள் சூழ்விசைக்கவே,

வாயில்தோறும் பூர்ணகும்ப வரிசை தோன்றவே,
கோயில்வீதிக் கடைகள்யாவும்கூட்டம் குலையவே,

கோக்கிவரிந்து குமரன்வாயில் கோயில்
தோன்றினன்
மிக்குயர்ந்த அடியார்கூட்டம் மெய்மறந்தது.

சலக்கழிச்சல்

தோல்சம்பந்தமான
சொறி, சிரங்கு,
தேமல், கரப்பன்
முதலியன குணப்படுத்த
உத்தரவாதம்.

சச்சிதானந்தா
வைத்தியசாலை

மித்திரன் அம்பாள்
கோவிலடி,
துன்னாலை வடக்கு,
கரவெட்டி P. O.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திராவிட - தமிழ் ஆராய்ச்சிகளில் பிரிட்டனின் பங்கு

மற்றும் ஆசியமொழிகளைப் போலவே திராவிட மொழிகளை-முக்கியமாகத் தமிழ் மொழியை பிரிட்டிஷார் கற்றனர். கிறித்துவ சமயப் பாதிரிமார்களும் ஆள்வோருமே முதலில் தமிழ்மொழியைக் கற்றனர்.

தமிழ்மொழியைக் கற்க வேண்டிய நிர்ப்பந்தம் கிறித்தவ சமயத்தைப் பரப்ப வந்த பாதிரிமார்களுக்கும், ஆட்சிபீடத்தில் அமர்ந்தவர்களுக்குமே ஏற்பட்டது. தமது சமயக் கொள்கைகளைப் பரப்புவதற்கு இது பாதிரிமார்களுக்கு இன்றியமையாததாக இருந்தது. தமது ஆட்சியைத் திறம்பட நடத்துவதற்கு ஆட்சியாளருக்கும் இந்தத் தேவை ஏற்பட்டது. தொடக்கத்தில் இந்த இரண்டு முனைப்புகளுமே தமிழைக் கற்கத் தூண்டின.

இலண்டன் அரும்பொருட் சாலையில் உள்ள (அக்காலத்திய) நூல்கள் இந்த உண்மைகளைக் கூறுகின்றன. தொடக்க காலத்தில் வெளியிடப்பட்ட சமயநூல்களின் முகவுரைகளில் சமயப்பிரசாரத் தேவையினால் தமிழ் கற்கவேண்டிய நிலை ஏற்பட்டமை தெளிவாகத் தெரியக் கிடக்கின்றது. அதேபோல ஆட்சியில் அமர்ந்திருந்த ஆளுநர் முதலானோரின் தனிப்பட்ட நாட்குறிப்புகளிலும், நிருவாக அறிக்கைகள், இடைக்கால அறிக்கைகள் முதலியவற்றிலிருந்தும் நிர்வாகத் தேவைகளினாலும் தமிழ்கற்கும் தேவைஏற்பட்டது என்பது தெளிவாக இருக்கின்றது.

இந்த அடிப்படையிலேயே தமிழை முதலில்கற்றார்கள். மொழிநோக்கில்கற்கவில்லை. ஆனால் நாட் போகப்போக மொழியை ஒப்புநோக்கிக் கற்றலும், இலக்கியங்களை இரசித்தலும் ஏற்பட்டது. எனவே முதலில் சமயத் தூதர்களின் வேலைகளைக் கவனிக்கும் போது கற்கப்பட்ட தமிழைத்தொடர்ந்து கிறித்துவத் தமிழ் உதயமாயிற்று. இலக்கிய நுகர்ச்சி ஏற்பட்டதைத் தொடர்ந்து இலக்கியத் தமிழும் கிறித்தவர்களால் உருவாக்கப்பட்டது. சமயப் பிரசாரத் தேவை என்ற நிலையைத் தாண்டி, தமிழ் இலக்கியச் சிறப்பினை மொழி ஆற்றலை, மேற்கத்திய நாடுகளுக்கு எடுத்துக் கூறும் ஆர்வம் தலை தூக்கியது.

இந்தத்துறையிலே உழைத்தவர்களுள் போப் ஐயர், கோவர், ரெய்லர், பெஸ்கி, சிலன்பேக், ட்ரூ, பென்டால், அண்டர்சன், பேசிவல் முதலானோர்குறிப்பிடத்தக்கவர்கள்.

முதன் முதலில் கோவர் என்னும் பாதிரியார் தென்னிந்திய கிராமப் பாடல்கள் என்னும் கிராமியப்பாடற் தொகுப்பு நூலை வெளியிட்டார். ரெய்லர் என்ற அறிஞர் தமிழ்மொழி மற்றும் மொழிகளைப் பின்பற்றாது தனிப்பீடுநடை போடுகிறது என்று பாராட்டியதை மேற்கோளாகக் காட்டிப்பாராட்டியுள்ளார் தமிழ்தெலுங்கு மொழிகளின் அவசியத்தை வற்புறுத்தி வந்தார்கள். அறுபத்திமூன்று ஆண்டுகளைத் தமிழ் கற்பதிலேயே செலவழித்தேன் என்று பெருமைப் பட்டார் ட்ரூ என்பவர்.

— கலாநிதி ஜோன் ஆசர் —

[எடின்பரோ பல்கலைக்கழகப் பொது மொழியியல் மூத்த விரிவுரையாளர்]

ஒரு சாரார் தமிழ் இலக்கியங்களைப் பாராட்டி வந்த பொழுதிலும்கிறித்தவமதத்தைச் சார்ந்த இன்னொரு சாரார் தமிழ்இலக்கியத்தில் வெறுப்புணர்ச்சியைக் காட்டிவந்தனர். வெறுப்புணர்ச்சி காட்டியவர்களைக் கண்டிக்க மற்றவர்கள் தவறியதில்லை. திருக்குறளில் கூறப்பட்டுள்ள கருத்துக்கள் மிக உயர்வானவை. அவற்றை யாரும் மறுத்துவிடமுடியாது. இதைக்கிறித்துவ மதத்தினர் மறைத்துவிடவும் முடியாது என்று ட்ரூ என்ற அறிஞர் குறிப்பிட்டார். விலைமதிக்கமுடியாத தமிழ்க் கருவூலங்களைச் சிதைப்பதோ அழிப்பதோ அன்றி அவற்றின் வளர்ச்சிக்கும் பாதுகாப்புக்கும் முட்டுக்கட்டைபோடுவதோ அறமாகாது. அது கிறித்துவ மதத்திற்கு அடுக்காது என்று கண்டனம் தெரிவித்தார். இதிலிருந்து தமிழ் இலக்கியங்களைக் குறைவுபடுத்தும் மனப்பான்மையும், அழித்தொழிக்கும் முயற்சியும் கிறித்துவ மதப்பிரசாரகர்கள் மத்தியில் இருந்திருக்கிறது என்பது தெரிகிறது.

அதே நேரத்தில்கிறித்துவ மத தூதர்களான பெஸ்கி, சிலன்பேக் போன்றோர் தமிழைக் கற்றதோடு அமையாது, தமிழையே பேசியும் எழுதியும் வந்தார்கள். பென்டோல் முதலியோர் தமிழ்மொழியின் அறிவாற்றலை வியந்தனர். அவர்கள் எழுத்துக்களில் தமிழ் அறிவின் சாயல்காணப்பட்டது. அண்டர்சன், சிலன்பேக், ரெய்லர், போப் போன்றோர் ஆங்கில-தமிழ் அகராதிகளை அவ்வப்போது எழுதி உதவினார்கள். பெஸ்கி நல்லதொரு தமிழ் அகராதியை எழுதினார். ஆங்கிலநாட்டுத் தற்கால வசனநடைக்கு ஆனெல்ட், பறிகடன் போன்றோர் எப்படியோ தமிழ்மொழியின் தற்கால வசன நடையமைப்பு உருவாக முன்னோடிகளாக உழைத்தார்கள்மேற்கத்திய அறிஞர்கள்.

அப்போது தமிழ்நாட்டுக்கும், இலங்கைக்கும் சமயப் பணிபுரியும் பொருட்டும் நிர்வாகம் புரியும் பொருட்டும் வந்தமேற்கத்தியர்களுக்குத் தமிழ் கற்கத் துணை நூல்கள் தேவைப்பட்டன அவ்வளவு முக்கியத்துவம் தமிழ் மொழிக்குக் கிடைத்தது. அண்டர்சன் எழுதிய Tamil Made Easy, பேகியூசனின் "Sinnadurai Pocket Tamil Guide" போன்ற நூல்கள் வெளியிடப்பட்டன இவை ரோம எழுத்தில் பேச்சுத் தமிழைக் கொண்டவை. இளேட்டன் போன்றோரும் இத்துறையில் உழைத்தனர்.

இது போலவே வேறுபல தமிழ்நூல்களும் வெளியிடப்படலாயின. போப் ஐயரின் தமிழ் இலக்கண விளைவிடை மிகச்சிறந்த ஒரு நூலாகும். கவிதைத் தொகுதிகளும் வெளியிடப்பட்டன. பேசிவல் ஐயரும் சில கவிதைத் தொகுதி ஒன்றையும் வெளியிட்டார். போப் ஐயர் மூதுரை, நீதிவிளக்கம், நீதிவெண்பா, திருக்குறள், நாலடியார், திருவாசகம் முதலிய நூல்களை வெளியிட்டார். பஞ்சதந்திர மொழிபெயர்ப்பு ஒன்றும் வெளியிடப்பட்டது. கம்பஇராமாயணம், சிவக சிந்தாமணி, தேம்பாவணி முதலிய நூல்களும் வெளியிடப் பட்டன.

இவற்றுள் திருக்குறள் தான் மேற்கத்திய மொழிகள் பலவற்றில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. மிகவும் உயர்ந்த கருத்துக்களைக் கொண்டது திருக்குறள்

(8-ம் பக்கம் பார்க்க)

## உயிரும் உணர்வும்

--பாண்டியூரன்--

மலர்களின் சிரிப்பைக்கண்டு மயங்கினேன், இயற்கை தந்த
உலகியல் கண்டு அஃதை உருவிட முனைந்தேன், காதல்
வலையிலே மருண்டு கன்னிக் கவிதையை வடித்தேன்; ஆனால்
தலைவனைக் கண்டுதாகம் தணிந்திலேன்! தயக்கம் கண்டேன்

ஆடுமாடன்பர் வம்பர் அன்னவா றனேகபேதம்
பாடமாய் நெட்டுயிர்க்கும் பலவின மன்பதைக்குள்
நாடகம் ஆடவந்த நாயகன் போல வாழ்ந்தேன்
தேடலேயன்றி ஈசன் தெரிந்திலன் திகைப்பே கண்டேன்!

மரணத்தின் வாயிற் சிக்கி மார்க்கண்டன் மடியா வண்ணம்
தருணத்தில் இறைவன் வந்து தடுத்ததா யறிந்தேன்; அந்த
வருணத்தில் பிறந்த என்றன் மரணத்தைஒத்திப்போட
கருணையின் வடிவாம் என்ற கடவுளைத் தேடுகின்றேன்.

'குருதியின் குறைவால்சீவ ஓட்டமும் குறைந்து போச்சு;
ஒருசில விநாடிக்குள்ளே உயிர்க்கிடர் நேரல்கூடும்
பொருந்திடுங் குருதிக்கோர் ஆள் போயுடன் கொணர்க' என்று
மருத்துவர் சொன்னார்: அன்னை மண்டையை மோதிக் கொண்டாள்

காதலித் துள்ளம் ஒன்றிக் கடிமணம் புரிந்த இல்லாள்
வேதனை யோடுகட்டில் விளிம்பிலே நின்று விம்ம,
சாதலை மறந்து என்வாய் சமாசம் பிடிக்கக் கண்டேன்
சோதனை சுடலை ஞானம்! சுதந்தர அவனைக் காணேன்.

வருத்தமும், இடையில் மூடும் மயக்கமும் ஊசலாடப்
பொறுத்திருக் கின்றேன்; ஆவி போயிடை மீளும் வேளை
மருத்துவர் சிகிச்சைக்காக மாற்றினர் இடத்தை; என்றன்
குருதியின் இயல்புக் கேற்ப கொடுத்த அவ்விறைவன் யாரோ?

என்னுயிர் காக்க வந்த இறையவன் யாரோ...? என்றேன்.
புன்னகை யுதிர்த்தவாறே பொட்டலத்தோடு தூரச்
'சின்னவன்' நின்று காதிற் சொருகினான் விரலை; என்ன...!
என்மல கூடஞ் சுத்தம் இயற்றிடும் இவனா...? என்று.

உன்வினா எழுந்த தன்னை 'ஓம் மகன்' என்றாள்; என்னுள்
நல்விரா வொன்றில் வெய்யோன் நகைமுகங் காட்டக் கண்டேன்!
வள்ளலா...? இல்லைத்தோட்டி மனிதனா...? உலக மாந்தர்
தள்ளிவைத் துறவுகொள்ளுந் தன்மயனென் னிறைவனன்றோ!

மலேஸியா தமிழாராய்ச்சிக் கருத்தரங்கம்

# தமிழிலக்கியம் கண்ட பரத்தையர்

— வி. ரி. மாணிக்கம், ஆராய்ச்சியாளர், சென்னை பல்கலைக் கழகம்

பண்டைத்தமிழ் இலக்கியங்களில் இருவிதமான பெண்களைக் காணக்கூடியதாயிருக்கிறது. கற்புநெறியை உறுதியான அடிப்படையாகக் கொண்டு ஒரே கணவனை மணம்செய்து வாழ்பவர்கள் ஒருவகை. மற்றது உலக இன்பங்களை சுகிக்கும் பொருட்டு பல ஆண்களுடன் கூடி அதையே வியாபாரமாகக்கொண்டது. முதலவகையை 'கற்புடை மகளிர்' என்று தமிழ்புலவர்கள் ஏற்றிப் போற்றினர். இரண்டாவது வகை 'பொது மகளிர்' எனப் பட்டனர். நுண்கலைகளின் வளர்ச்சிக்கு முக்கியமான காரணமாயிருந்தவர்கள் இவர்களே.

நாகரீகமுள்ள எல்லாநாடுகளிலும் விலைமகளிர் இருந்தார்கள். 'ஒளியும் நிழலும் போல நாகரீகமும் வியபிசாரமும் ஒன்றியுள்ளன' என்று ஒஸ்வால்ட்ஷ்பெங்லர் என்ற தத்துவஞானி கூறுகிறார். 2000 வருடங்களுக்கு முன்பே அது மனித சமுதாயத்தில் வேரூன்றி விட்டது. தமிழர் நாகரீகத்தின் ஆரம்ப காலங்களிலிருந்தே விலை மகளிர் சமுதாயத்தில் காணப்பட்டனர். கிராமங்களைவிட நகரங்களிலேயே அவர்கள் மிகுதியாக இருந்தார்கள். அரசர்களும் பிரபுக்களும் பணம் படைத்தவர்களும் அவர்களை ஆதரித்தனர். சாதாரண குடியானவன் ஏக பத்தினி விரதனாகவே இருந்தான்.



### மூன்று வகையினர்

வியபிசாரம் செய்யும் பெண்களைதமிழ்ப்புலவர்கள் பல பெயர்களால் அழைத்தனர். பரத்தை, கணிகை, தூர்த்தை, பதியிலார், கூத்தியர், நாடகமகளிர், பொருட்பெண்டிர், புறநிதி மகளிர், பூவிலைமடந்தையர், வரைவின் மகளிர், நாணமின்மை, ஒழுக்கக் கேடு, கட்டுமீறல், இச்சை, கவர்ச்சி, தற்புகழ்ச்சி, தந்திரம்-இவையெல்லாம் விலைமாதரின் குணாதிசயங்கள், அவர்களுடைய பரம்பரை, படித்தரம், நடத்தை முதலியவற்றைப் பொறுத்து புலவர்கள் அவர்களை மூன்று பிரிவுகளாகப் பிரித்தனர்-காமக்கிழத்தியர், ஆடற்கூத்தியர், பொதுமகளிர்.

### காமக்கிழத்தியர்

உயர்தர விலைமாதரின் வயிற்றிலுதித்த பெண்கள் தாம் விரும்பிய பிரபுக்களை மணந்து அவர்களுடைய காமக்கிழத்தியராய் இருந்தனர். இவ்வைப்பாட்டிகள் பிற ஆண்களை விரும்பாமல் கற்புநெறியைக் கடைப்பிடித்தனர். தங்களையும் மனைவிகளாகவே கருதினர். காமக்கிழத்தியரிடம் காணப்பட்ட இந்த நற்பண்பை தொல்காப்பியரே வியந்து போற்றியுள்ளார்.

தலைவனின் இன்பம் ஒன்றையே கருத்தில் வைத்து

(8-ம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழிலக்கியம் கண்ட பரத்தையர்

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

நெறி பிறழாத வாழ்க்கை நடத்தினுர்கள். கற்புள்ள இல்லாள் ஒருவளின் நற்குணங்கள் யாவும் அவர்களிடம் காணப்பட்டன. தலைவனுக்கும் தலைவிக்கும் பிறந்த குழந்தையை தன் சொந்த மகவெனக்கருதி அதைக்கண்ணேடு கண் ஒற்றி வளர்த்தார்கள். எவ்வித பொருமையோ குரோதமோ இல்லாமல், அவளைப் பலவாறு அலங்கரித்துப் பார்த்து மகிழ்ந்தார்கள். தலைவனுக்கும் தலைவிக்கும் கோப தாபம் ஏற்படின் சிலசமயங்களில் காக்கிழத்தியரே அதைத் தீர்த்துவைப்பர்.

## ஆடற்கூத்தியர்

இவர்களைத்தவிர 'சேரிப் பரத்தையர்' என்றழைக்கப்பட்ட எந்நேரமும் தடையின்றிக் களிப்பூட்டும்காதல் மகளிரும் இருந்தனர். ஆடல்பாடல்களில் சிறந்து விளங்கி அரசரோடும் பிரபுக்களோடும் பழகும் இவர்கள், 'ஆடற் கூத்தியர்' என்றும் பெயர் பெற்றனர். இவர்கள் சாதாரண வியபிசாரிகளைப் போலல்லாமல் குறிப்பிட்ட சில பிரபுக்களுடனேயே கொண்டாட்டம் வைத்தனர். தனது பிறப்பு, பெருமை, இளமை கலைத்திறன், பால் கவர்ச்சி ஆகியவற்றிற்கு ஏற்றுற்போல தன் விலையைத் தானே நிர்ணயித்துக்கொள்ளுவாள். ஆடற் கூத்தியாகிய மாதவியை கோவலன் ஆயிரத்தெண்ணூறு கழஞ்சு பொன் கொடுத்து வாங்கினுன் என்பது சிலப்பதிகாரம். மன்னர் முன்பு தமது அழகு, கலை முதலியவற்றை காண்பித்து 'தலைக்கோள நிலை' என்ற பெரும் கௌரவப் பட்டத்தைப் பெற்றனர். இவர்களுக்கு நாட்டில் மதிப்பும் மரியாதையும் இருந்தது.

## பொருட் பெண்டிர்

ஆடலிலும் பாடலிலும் துய்த்து. தங்கள் அழகையும் இளமையையும் விற்று பணமும் இன்பமும் பெற்று, வாழ்க்கையில் எச்சமயத்திலாவது ஒரு தனி ஆடவனுடன் சேர்ந்திராத விலை மாதர்களை 'பொருட் பெண்டிர்', 'விலைமகளிர்' அல்லது 'வரைவின் மகளிர்' என்று அழைக்கப்பட்டனர். இக்கீழ்சாதிப் பெண்கள் கூச்சமின்றி தங்கள் உடலை விற்று அடிக்கடி பலதரப்பட்ட ஆடவருடன் கூடிக்குலவி மகிழ்வர். ஆண் மனதைக் கவரும் பலவித அணிகலன்களைப் பூண்டு, மாலை வேளைகளில் சாலையோரத்தில் நின்று வியாபாரம் செய்வார்கள் இம்மடந்தையர். தம்மை நாடி வந்தவர்களை பற்பல ஜாலவித்தைகளைக் காட்டி அவர்களுக்குப் பரிபூர்ண இன்பத்தை வழங்குவர். ஆண்கள் தங்கள் சொந்த வீடுகளில் பெறும் இன்பத்தைக் காட்டிலும் தங்களிடத்தே கூடுதலான இன்பம் பெறவேண்டுமென்ற நோக்கத்துடன் காம இச்சையைத் தூண்டிவிடும் பற்பல தந்திரங்களைக் கையாள்வர்.

## கலையும் கணிகையரும்

எவ்வளவு கேவலமாகத்தான் இவர்கள் வாழ்க்கை நடத்தியபோதிலும், நுண்கலைகளில் இவர்கள் காட்டிய ஈடுபாட்டை நாம் இலகுவில் மறந்துவிட முடியாது. 'இந்த சுதந்திரப் பெண்கள் இல்வாழ்க்கை என்ற பாரத்தைச் சுமக்க மறுத்தாலும், கவின் கலைகளுக்காகத் தமது உடல் பொருள் ஆவி அனைத்தையும் அர்ப்பணம்செய்து, அவற்றைப் பேணிப் பாதுகாத்துவந்தவர்கள் அவர்களே' என்று பேராசிரியர் தெ. பொ. மீனுட்சிசுந்தரனுர் கூறுகிருர்.

கலையே இவர்களது ஜீவனேபாயமாக இருந்தது. இரவு-பகலாக அவர்கள் இல்லங்களில் யாழின் ஒலியும், முழவின் ஓசையும் கேட்கும். 'பண்ணியல் மடந்தையர்', 'கலையுணர் மகளிர்' முதலிய சொற்களால் தமிழ் சமுதாயத்திலுள்ள பிற பெண்களைவிட இவர்களே கலையை வளர்க்க உதவினர் என்பது புலனுகிறது. அவர்களுக்கென அமைந்த அறுபத்து நான்கு கலைஞானங்களிலும் அவர்கள் தேர்ச்சி பெற்றனர். இயற்கையாகவே அவர்களிடம் தேனினுமினிய குரல் இருந்தது. அத்துடன் பலவித வாத்தியங்களிலும் இசை மீட்டி அவர் தம் காதலரை இன்பத் தடாகத்தில் அமிழ்த்தினர்.

இசையுடன் நடனக் கலையும் அவர்களிடம் சிறந்து விளங்கியது. 'தலைக்கோலாசான்' என்ற ஆசிரியனிடம் ஒரு வருடங்கள் பயின்றபின் தமது பன்னிரண்டாவது வயதிலேயே அரசவையில் ஆடி விருது பெற்றனர்.

கண்ணைக் கவரும் அவர்களுடைய எழில்மிகு தோற்றமும், மேனி மினுக்கும், ஆடை அலங்காரமும், அவர்கள் அணியும் ஜவ்வாது, அத்தர் போன்ற வாசனைத் திரவியங்களும், நறுமணம் வீசும் மலர்மாலைகளும், இன்னிசையும், நாட்டியமும்-இவையெல்லாம் சேர்ந்து, போவோர் வருவோர் எல்லோரையும் அவர்களுடைய வலையில் சிக்கவைத்தது.

## பண்பாடு

நிலத்தைப் பண்படுத்துவது போல இனத்தைப் பண்படுத்துவது பண்பாடு. நிலத்தைப் பயிரிடுவதற்காகப் பண்படுத்துகிறேம். இனத்தையும் வாழ்வுக்காக வாழ்வின் வழத்துக்காக நீடித்த நலத்துக்காகப் பண்படுத்துகிறேம். பண்படுத்திப் பயிரிடப்பயிரிட நிலம் மென்மேலும் பண்பட்டதாகபண்பாடு உடையதாக அமையும். இதுபோலப் பண்பட்ட இனத்திலேயே நாம் வாழ முடியும். அதேசமயம் மேலும் மேலும் பண்படுத்தினுல்தான் நாம் வாழ்வதுடன் இல்லாமல் வாழ்வின் வளமும் காணமுடியும்.

நிலத்தைப் பண்படுத்தும் செயலிலிருந்தே நாகரிக வாழ்வுக்கேற்ப மனிதனைப் பண்படுத்துவதற்கும் இச்சொல் வழங்கப்படலாயிற்று எனக் கொள்ளலாம்.

பன்மொழிப்புலவர்
— கா. அப்பாத்துரை

# திராவிட - தமிழ்....

(7ம் பக்கத் தொடர்ச்சி)

என்று போப் ஐயர் பாராட்டியுள்ளார். வேறெந்த மொழியிலுமில்லாத மிக அரிய கருவூலம் திருக்குறள் என்று பேசிவல்ஐயர் பாராட்டியுள்ளார். சென்னை சிவில் சேவையைச் சேர்ந்த எல்லிஸ் என்பவர் திருக்குறளுக்கு விரிந்த குறிப்புரை எழுதியுள்ளார். வெவ்வேறு இலக்கியங்களிலும் மேற்கோள் காட்டியுள்ளார். மத்யூலின் என்பவரும மொழி பெயர்த்துள்ளார்.

தமிழில் உள்ள பக்திஇலக்கியங்கள் தான் அதிகம் மொழிபெயர்க்கப்படவில்லை. முக்கியமாக நாயன்மார்கள், ஆழ்வார்களுடைய இனிய அரியபாடல்கள் இன்னும் மொழிபெயர்க்கப்படவில்லை. காரணம்தமிழ்இலக்கியங்கள் பெரும்பாலும் ஏட்டுச்சுவடிகளாக இருந்தமையே. ரெய்லர் என்றஅறிஞர், "Oricutal Tamil Historical Collection of Manuscripts" என்ற தொகுப்பைத் தயார் செய்துள்ளார். கோல்ட்வெல்ஐயர் பட்டினத்தார் பாடல்களை மொழிபெயர்த்து வெளியிட்டுள்ளார்.

சேர். வில்லியம் ஜோன்ஸ் இந்திய மொழிகளின் தாய் மொழி சமஸ்கிருதம் என்ற கருத்தை வெளியிட்டார். வில்லியம் செரே என்பவர் இந்துஸ்தானி, தமிழ் எல்லாம் சமஸ்கிருதத்தினின்றும் பிறந்தமொழிகள்என்ற கருத்தை வெளியிட்டார். ஏ. டி. கம்பெல் எழுதிய "தெலுங்கு மொழி இலக்கணம்" என்ற நூலிலும் இந்தக் கருத்தே தெரிவிக்கப்பட்டது. ஆனல் கோல்ட்வெல் ஐயரின் "திராவிட மொழிகள் ஒப்பிலக்கணம்" என்ற ஆராய்ச்சி நூலின் பின்ன திராவிட மொழியான தமிழும் சமஸ்கிருதமும் வெவ்வேறு இனமொழிகள் என்பதுதெளிவாயிற்று. சமஸ்கிருத மொழி ஆரிய இனத்தைச் சார்ந்ததால், ஆரிய மொழிகளைப் பேசும் மேற்கத்திய அறிஞர்களை இலகுவில் கவர்ந்தது. தென்மொழியைச் சீர்பெறக்கற்காதவர்கள் அதுவும் சமஸ்கிருதத்தின் கிளை என்று எண்ணினுர்கள். ஆனுல் நிலைமையை மாற்றி விட்டார் கோல்ட்வெல்ஐயர்.

இந்தியாவின் வரலாறு புதுத் தில்லியின் வரலாறு அல்ல. இந்திய வரலாற்றில் தென்னிந்திய வரலாறு மிக முக்கியமானது. தென்னிந்திய புவியியல் மிக முக்கியமானது. இதை எவரும் மறந்து இந்திய ஆராய்ச்சியில் இறங்கக்கூடாது.

தமிழில் அச்சிடப்பட்ட சொற்களின் பட்டியல் ஒல்லை ஜோன் மேடொக் தயாரித்தார். இது பிரித்தானிய அரும் பொருட்சாலையில் இருக்கிறது. இதுபோலவே பல ஏட்டுச்சுவடிகளும் உண்டு. இந்த வகையில் பிரித்தானிய அரும் பொருட்சாலை தமிழ் ஆராய்ச்சிக்கு ஒரு அரிய நிலைக்களனுகத் திகழ்கின்றது. மக்மில்லன் வெளியீட்டகத்தார் வெளியிட்ட பல தமிழ் நூற்களை ஆங்கிலேயர்களே எழுதினுர்கள்.

பெரும்பான்மையான மேற்கத்தியஅறிஞர்கள் முதலில் கற்ற இந்திய மொழி தமிழ். பெரும்பான்மையான மேற்கத்திய அறிஞர்கள் முதன் முதலில் பங்கு பற்றிய இந்தியமொழி மாநாடு அண்மையில் கோலாலம்பூரில் நடைபெற்ற உலகத்தமிழாராய்ச்சி மாநாடேயாகும். மேற்கத்திய நாடுகளில் தமிழாராய்ச்சியும்தமிழ்த்துறையும் முன்னையைவிட இப்போது பெருகியிருந்தாலும், வருங்காலத்தில் இன்னும் பல்கிப் பரந்து புதுத் திருப்பத்தை ஏற்படுத்தும் என்பதற்கான அறிகுறிகள் ஏராளமாக உண்டு.

[இது 28-4-66 அன்று இலங்கைப் பல்கலைக்கழகத்தின் புதிய கலைத்துறைமண்டபத்தில் (கொழும்பு) வேத்தியல் ஆசியப் பேரவையின் இலங்கைக்கிளையின் (ரோயல் ஏஷியாட்டிக் சொசைட்டி) ஆதரவில், அவையின் துணைத்தலைவர் திரு. சி. பி. பி. பெரேராவின் தலைமையில் ஆற்றிய உரையின் சாரம்.]

[தொகுத்தவர்: ஆ. தேவராசன்]


# அன்பின் இன்பக் கனி



அவன் ஒஸ்டர்மில்க் அருந்தி,
ஆரோக்கியமாகவும், திடகாத்திரமாகவும்
வளர்வதைக்கண்டு மகிழ்ச்சியடைவார்கள்.

ஒஸ்டர்மில்க் சுத்தமான, தூய்மை மாருத பூரண பால் உணவு, பச்சிளங் குழந்தையின் மென்மையான ஜீரணத்திற்கு பாதுகாப்பானது. அயச்சத்தும் விட்டமின் Dயும் சேர்க்கப்பட்டிருக்கும் ஒஸ்டர்மில்க் குழந்தைகளை திடகாத்திரமாகவும், ஆரோக்கியமாகவும் வளரச்செய்கிறது.




துவக்கத்திலிருந்தே ஒஸ்டர்மில்க் அருந்தும்
குழந்தைகள் பேலனை சுக வளர்ச்சி பெறுகிருர்கள்.

# ஒஸ்டர்மில்க்

சிலோன் லிமிட்டட்., தபாற் பெட்டி 23, கொழும்பு

173/66


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்மையே நீ பெருமை கொள்

— வி. எஸ். பாலசிங்கம் —

எந்த காவியங்களிலும் சரி எந்த இதிகாசங்களிலும் சரி பெண்மைக்கு முதலிடம் அளித்து இருக்கிறார்கள். கவிஞர்கள், அறிஞர்கள், எல்லோரும் போற்றி புகழ்ந்து பாடி இருக்கிறார்கள். ஆணுடன் சரிநிகர் சமமாக அவர்களை நிறுத்தி அவர்களுக்கு உரிமைகள் கொடுத்திருக்கிறார்கள்.

பெண்ணின் முழு உருவத்தை மூன்றுவடிவங்களில் காணலாம். தாய், மனைவி, சகோதரி. சிறு குழந்தைஉருவத்தில் தாயைத்தான் காணுகிறோம். அந்நேரத்தில் தாய்ப் பாசத்தைத்தான் உணரமுடிகிறது. தாயின் புனிதமான சேவையைப் பார்க்கமுடிகிறது. அன்னையின் அரியஅணைப்பைப்பெற முடிகிறது. எமது தமிழ்நாட்டில் வரவர தாய்மைத் தன்மை குறைந்து கொண்டே போகிறது அன்னையின் புனிதசேவை மங்கிக் கொண்டே போகின்றது. இது தமிழ் இனத்துக்கு பெரும் கௌரவக் குறைவு.

தாய்க்கு தாயாக இருக்கும் அம்மாவே! தாயே!! பெற்றவள் நீயிருக்க குழந்தையை மற்றப்பெண்ணிடம் (ஆயாவிடம்) விடுகிறாய். சொந்த தாய்ப்பால் இருக்க புட்டிகளில் வரும் வேறுநாட்டு மாப்பாலைக் கொடுக்கிறாய். தாயின் மடியில் தூங்கவைக்கும் நீ தள்ளு வண்டியில் கிடத்துகிறாய். இது சரிதானா? சிந்தித்துப் பார்த்துச் சொல்.



அடுத்து எங்கள் கவனத்துக்கு வருவது சகோதரி. பாசத்தின் முழு உருவம். தாய்ப்பாசம், எவ்வளவு வலிமை மிகுந்ததோ அது போல சகோதர பாசம் பொல்லாதது. உடன்பிறந்த சகோதரி (தங்கை) நாம் காண்கிறோம். தாயைப் போல் எம்முடன் பாசம் வைத்து அண்ணா அண்ணா என்று வாய்ஓயாமல் அழைக்கும் அன்புத் தங்கையைக் காண்கிறோம். தங்கையின் வாழ்வு சிறப்போடு அமைய, பூவுடன் பொட்டு அவளை சுமங்கலியாக ஆக்கும்வரை நாம் கண் விழித்தே இருக்கிறோம். அங்கே எங்கள் தலையான கடமை இருக்கிறது.

அடுத்து மனைவி; மனைக்குரியவள். அவள் இல்லாத வீடு பாழ். அவள் ஒரு வகையில் சேவகனுகவும், இன்னொரு வகையில் மந்திரியாகவும், சந்தோஷம் அளிப்பதில் விலைமகளாகவும் இருக்கிறாள். அப்படி இருப்பவளே உண்மையான மனைவி. அல்லாமல் கணவன் வேலைக்கு செல்ல வெறும் மெக்கப் போட்டு அழகு என்று அலங்கோல உடை உடுத்து, கட்டியகணவனையும் பெற்றெடுத்த பிள்ளைகளையும் மறந்து விளக்கு வைக்கும் நேரத்தில் வீடு திரும்புபவள் உண்மையான மனைவியல்ல. பெண்களே உங்கள் கணவனுக்கு மதிப்பு கொடுங்கள். அவர் சொற்படி நடவுங்கள். அடங்காப் பிடாரியாக உங்கள் பொன்னான இல்லறவாழ்வை பாழாக்காதீர்கள்.

பெண்மையே நீ பெருமைகளை ஒப்புக்கொள். பெருமை வர நடந்துகொள்.



இச்சித்திரம் சட்டையின் கீழ் பகுதியில் தைத்தால் அழகூட்டும்.

செல்வி கோ. சிவஞானவதி



## மருதோன்றியிலிருந்து "கியூரெக்ஸ்"

நவநாகரீகப்பெண்மணிகள் தங்களை அழகுசெய்ய உபயோகிக்கும் பொருட்களில் "கியூரெக்ஸ்" என்று கூறப்படுகிற நகப்பூச்சும் ஒன்றாகும். கடையில் நாங்கள் வாங்கும் "கியூரெக்ஸ்" இரசாயனக் கலவைகளாலானது. இதனால் சிலவேளை தீங்குகளும் ஏற்படலாம். ஆனால் மருதோன்றி இலையிலிருந்து செய்யக்கூடிய நகப்பூச்சு சுகாதாரமானது. அபாயமற்றது.

"லோசீனியா இனிமிஸ்" (Lawsenia inemis) என்ற தாவரவல்லுநரால் அழைக்கப்படும் மருதோன்றி மரத்தின் இலைகளைச் சேகரித்துக் கொள்ளுங்கள். சேகரித்த இலையை சிறிதுசிறிதாக பசையாக அரைக்கவும், அத்துடன் சுண்ணாம்புக் கற்களையும் (கல்சியம்காபனேற்று) எலுமிச்சம்புளியையும்விட்டு பசை போன்ற பருவத்திற்கு அரைக்கவும். பின்பு இப்பசையை சீலைத்துணியால் வடிகட்டி வருகின்ற சாற்றை போத்தலில் இட்டு வைக்கவும். இதுதான் இயற்கையோடமைந்த "கியூரெக்ஸ்"

இதிலுள்ள குறைஎன்னவெனில், வெகு சீக்கிரத்தில் இந்தப் பூச்சு காயமாட்டாது.

— செல்வி மீனலோசனி

## ஜெலி

தேவையான பொருட்கள்:-

1 அவு சைனாமோஸ்.
1/4 று. சீனி.
7 கோப். நீர்.
வனிலா சிறிது. நிறம் (பச்சை, மஞ்சள், றோஸ்).

பாகமுறை:-

நீரையும் சீனியையும் ஒரு பாத்திரத்தில் போட்டு பாணி காய்ச்சவேண்டும். சைனாமோஸை நீரில் போட்டு 30 நிமிடம் ஊறவைக்கவேண்டும். பாணி கம்பிப் பருவம் வரும் தறுவாயில் சைனாமோஸை போட்டு நன்றாகக் கரையக் கிண்டி, வனிலாவையும் விட்டு இறக்கவேண்டும். டின்களில் விட்டு விரும்பிய நிறங்கள் சேர்க்கலாம் குளிர்சாதனப் பெட்டியில் வைத்து இறுகவிடவேண்டும். அல்லது குளிர்காற்றுப்படும்படி வைக்கவேண்டும்.

## கஸ்டர்

தேவையான பொருட்கள்:,

2 கோப் பால்.
2 று. சீனி.
4 தே. க. கஸ்டர் பவுடர்.

பாகமுறை:-

பாலில் கஸ்டர் பவுடரையும், சீனியையும் போட்டு அடுப்பில் வைத்து நன்றாகக் கிண்டவேண்டும். இறுகி வரும்போது வனிலாவைவிட்டு இறக்கி ஓர் பாத்திரத்தில்விட்டு ஆறவிடவேண்டும்.

ஜெலியை சிறுசிறு துண்டுகளாக வெட்டி டிஸில் போட்டு கஸ்டர்விட்டுச்சேர்த்துச் சாப்பிடவேண்டும். சிறுபிள்ளைகள் விரும்பிச் சாப்பிடுவார்கள். அவர்களுக்கும் நல்லது.

செல்வி இலட்சுமிதேவி அருளம்பலம்.
வல்வெட்டித்துறை.

# 'இது வாழும் முறையடி பாப்பா'

எப்பொழுது பார்த்தாலும் தங்களின் வறிய நிலையை எண்ணிக்கொண்டு, வருவோர் போவோரிடத்தெல்லாம் தங்களின் துன்பங்களையும் துயரங்களையும் எடுத்துரைத்துக்கொண்டு இருப்பவர்களால் ஒரு போதும் வளமான வாழ்வு வாழ முடியாது. மருத்துவனாக வாழவிரும்பும் ஒரு இளைஞன் எவ்வாறு மருத்துவ நிலையம், மருத்துவர்கள், மருத்துவ நூல்கள், மருத்துவக் கருவிகள் ஆகியவற்றின் சூழலிலே வாழ விரும்புவது போன்று 'வளமான வாழ்வு' வாழவிரும்பியவனும் வளமான வாழ்வைப்பற்றியே சிந்திக்க வேண்டும்; அதைப்பற்றியே பேசவேண்டும்; வளமான வாழ்வு பெற்றவன்போல நடக்கச் செயலாற்றப் பழக வேண்டும். பெரிய மனிதன் போல வாழ விரும்புபவர்கள் அவர்களைப்போல நடந்து பெரிய மனிதர்களாகிவிடுவதுபோல, வளமான வாழ்வினன் போன்று எண்ணவும், செயலாற்றவும் செய்பவர்கள் வளமான வாழ்வினராக மாறிவிடுவார்கள்.

'வெள்ளத் தனைய மலர்
நீட்டம் மாந்தர்தம்
உள்ளத்தனைய துயர்வு''

- சி. சண்முகலிங்கம்

★

ஒருவன் தனது வாழ்வைச் சிறந்த முறையில் கடைப்பிடிப்பதற்கு, அவனுக்குப் பெரியோர்களின் அறவுரைகளும், மன நிறைவும் நிறைய இருக்கவேண்டும். ஒருவன் தனக்காக வாழாது பிறருக்காக வாழ வேண்டும். அதுவே வாழ்வாகும். பிறர் வாழுவதற்காகத் தனது வாழ்வையே தியாகஞ்செய்யும்முறைமை, பூமியில் நிலைக்கும் அவனது வாழ்வின் நிறைவாகும்.

எது வாழ்வு என்ற வினாவுக்கு விடைகள் பலவாகி உள்ளன காந்திஜியின் வாழ்க்கைமுறை அகிம்சை, சத்தியம் என்னும் இரண்டையும் கொண்டு சிறப்புற அமைந்திருந்தது. காந்தி தமது வாழ்க்கையை மானமுள்ள, வீரமுள்ள வாழ்க்கையாக நடத்திச் செல்வதற்கு மேற்கூறிய இரு தருமங்களும் உறுதுணை புரிந்தன.

துறவறவாழ்வு இல்லறவாழ்வு அடைவதற்கு மேலான வழியாகும் எனப் பல நூல்களும் பறைசாற்றுகின்றன. ஆனால் இல்லற வாழ்வு இழித்திடப்படக்கூடியது அல்ல என்பதை திருக்குறள் இல்லறவியல் நிரூபிக்கிறது. எவ்வாழ்வாயினும் சரி, அதை அவ்வவ்வருக்கத்தார், நெறிபிறழாது கடைப்பிடித்தால், அவர்களுக்கு மேன்மையும், ஆக்கமும், விடுதலையும் உண்டாம் என்பதில் ஐயமில்லை.

வாழ்க வாழ்வின் குறிக் குறிக்கோள்.

-செல்வி. சு. இராஜேஸ்வரி

★

நன்றாக உண்டு, உடுத்து உல்லாசமாகப் பொழுதைப் போக்கிப் பிள்ளைகளையும் பெற்று வளர்த்துவிடுவது தான் வாழ்வு என்று நினைப்போரே தற்காலத்தில் அதிகம். அதைவிட நன்கு படித்துப் பட்டம் பெற்று நாடெங்கும் பரப்பிய புகழுடன் வாழ்வதுதான் வாழ்வு என எண்ணுவோர் பலர். இந்நிலவுலகத்தின் கண்ணே இப்படியாகப் பலதிறப்பட்ட வாழ்வுகள் வாழப்படுகின்றன. இவையெல்லா வாழ்வா?

சிறந்த வாழ்வு வாழவிரும்புபவன் வாய்மை, இன்சொல் கூறல், நாவடக்கம் போன்ற நல்வினைகளைக் கடைப்பிடிப்பதோடு கோள் சொல்லல், புறங்கூறல் முதலிய தீயவற்றை ஒதுக்க வேண்டும். பொய் சொல்வதனால் அவன் தன் மலர்ந்த வாழ்வையும் கெடுப்பதன்றிப் பிறர் வாழ்வையும் கெடுக்கின்றான்.

சுயமுயற்சி, தெய்வ சிந்தனை, தன்னம்பிக்கை, மன [illegible] தல் போன்றவையே சிறந்த வாழ்விற்கு அடிகோலுவனவாகும்.

-செல்வி. பூலோகநாயகி அன்னத்துரை

★

மனம் துன்பத்தில் நழுவி விழத் தொடங்கும்போது, அதை தைரியம் என்ற கடிவாளத்தைப் பிடித்து நிறுத்திப் பழகுவதே சரியான பயிற்சியாம். இந்தப் பயிற்சி ஏற்படுத்திக்கொள்ள வேண்டி சிலர் குடும்பத்தையும் உலகத்தையும் விட்டு நீங்கி தனியிடங்களிலிருந்து கண்ணை மூடிக்கொண்டு பழகுகிறார்கள் வேறு சிலர் மூச்சைக் கட்டிப் பழகுகிறார்கள். சிலர் தனியே இருந்து ஜபம் பண்ணிப்பார்க்கிறார்கள்.

இதிலெல்லாம் உலகத்தாருடன் கூடி எல்லாவகைகளிலும் மற்ற உலகத்தாரைப் போலவே தொழில் செய்து கொண்டு உலக விவகாரங்களை நடத்தியவண்ணமாகவே சஞ்சலத்துக்கு இடங்கொடாதபடி அறவாழ்வு வாழ்தலே பயன்தரக் கூடியது.

-- க. செல்வராசா

★

நிமிடத்திற்கு 120 பேர் பிறக்கிறார்களாம். ஆராய்ச்சி மூலம் கண்ட உண்மை. ஆனால் எத்தனை பேர், எல்லோருடைய உள்ளங்களிலும் நிலைத்திருப்பார்கள்? ஒருவர் இருப்பதே அருமை. எல்லோருந்தான் படிக்கிறார்கள். ஆனால், படித்தபடி நடப்பவர்கள் எத்தனை பேர்? வெகுவெகு சொற்பம்.

"எது வாழ்வு?'' என்றதும் உடனே வள்ளுவனின் குறள்கள் ஓடிவந்து. "நான் காட்டுகிறேன்'' என்று அழைத்துச் செல்கின்றன. ஆம்! குறளுக்குள்ளேதான் வாழ்வின் இரகசியம் இருக்கிறது. வள்ளுவன் காட்டும் வழிதான் வாழ்வு. அதற்குக் குறள் என்ற குளத்திலே ஆழ முழுகவேண்டும். முழுகினால்மட்டும் போதாது அதன்படி நடக்கவேண்டும். வள்ளுவனின் அறிவுரைகளே, எம் வாழ்வைச் செப்பனிட உதவும்.

-அ. கனகதுரை

★

ஒரு மனிதன் தன் சிறந்த இலட்சியங்களைக் கொள்வதற்குப் பல [illegible] உண்டு. அரசைச் செம்மையுறச் செய்யவேண்டும் என்ற ஒரு சிந்தனை ஒருவனை அரசியல் இலட்சியவாதியாக்கலாம்; இயற்கை அன்னையின் இன்பத்தை ரஸித்து பிறர்க்குமதை அளிப்போம் என்ற எண்ணத்தை கொண்கையில் அவன் கவிஞன், எழுத்தாளன் என்ற இலட்சியவாதியாகலாம். ஆண்டவனது அகண்ட ரூபத்தை அறிய முயலுகையில் அவன் ஞானி எனும் இலட்சியவாதியாகலாம். பிரபஞ்சத்தின்கண் பரந்திருக்கும் அண்டகோடிகளின் ஆக்கத்தை ஆய்கையில் அவன்

(10ம் பக்கம் பார்க்க)

## அணில்

குஞ்சம் போன்ற
வாலைத் தூக்கி
குதிக்கும் அணிலே
வா வா

அஞ்சி அஞ்சி
ஓடவேண்டாம்
ஆசை கொண்டேன்
வா வா

பட்டுப் போர்வை
போர்த்த உன்றன்
பஞ்சுமேனி மீதிலே
தொட்டு மூன்று
கோடு போட்ட
தோழன் யாரோ
சொல்லுவாய்

தம்பியோடு நானுந் தேட
தப்பிவிட்ட கனிகளை
கொம்பு விட்டுக்
கொம்பு தாவி
கொந்தும் விந்தை
கூறுவாய்

—வ. ராதாகிருஷ்ண சர்மா

## சிறுவர் பூங்கா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறுவர் பூங்கா

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

விஞ்ஞானி என்ற இலட்சிய வாதியாகலாம். வீரம், வெற்றி என்பவற்றை நுகர் வதை நோக்காயுடையோன் விறலோன் என்னும் இலட்சியவாதியாகலாம். கலைகளிலே உயர் பண்பைக் காண்பவனும் கலைஞன் என்னுமொரு இலட்சியவாதியாகலாம். மனித வாழ்வு எது, அதன் உண்மையான இரகசியம் யாது என்ற சிந்தனையுடன் வாழ்பவனும் தத்துவஞானி எனுமொரு இலட்சியவாதியாகவே ஆகின்றான்.

இங்ஙனம் இலட்சியங்கள் பல பல கொண்டு ஒருவர் இலட்சியவாதியாகின்றபோது அவன் தன் நிஜமான வாழ்வை அனுபவிக்கின்றான். ஆகவே இலட்சியங்களுடன் வாழ்ந்து அவைகளிலே வெற்றி கொண்டு அவற்றின் மூலம் இன்பம் பெற்று அறவாழ்வு வாழ்வதே! வாழ்வு— உண்மையான வாழ்வு.

--ஏ. இருதயதாஸ்

☆

ஆகவே, வாழ்வின் சுழலில் சிக்கி கெட்டழிந்தவர்களைத் திரும்பவும் நல்வாழ்வுப் பாதையில் அழைத்துச் செல்ல அரும்பாடுபட வேண்டும். உலகில் நல்லறிவு போதித்த பெரியார்களின் அடிச்சுவட்டைப் பின்பற்றிச் செல்ல நாமும் மற்றவர்களும் முனையவேண்டும். உலகிற்கு வழிகாட்டியாக, மக்களின் உள்ளத்திலே என்றும் அழியா ஓவியமாக, ஒளி விடும் சுடர் விளக்காக நாம் எல்லோரும் நமது வாழ்க்கையை நீதி தவறாத நேர் வழியில் நடத்திச் செல்லவேண்டும், நமது வாழ்வினால் உலகம் நன்மையடையுமானால் நிச்சயம் அது வரலாற்றில் பொறிக்கப்படும். இதைவிட வேறு இவ்வுலகில் என்ன இருக்கிறது.

--அ. யேசுதாசன்

☆

தொண்டு செய்து, தாய்மையை நெஞ்சில் பதித்து, பண்புடன் வாழ பாரிலுள்ள மக்கள் தம்மைப் பழக்கிக் கொள்ளவேண்டும். அப்பொழுதுதான் இரத்ததானம் செய்ய, சிரமதானத்தை அமைக்க, மக்களுடைய சிந்தனை கொடி விட்டுப்படரும். அதற்கு இக்கால மாணவர்களும், இளைஞர்களும் சிறு வயதில் இருந்தே பஞ்சமா பாதகங்களை ஒழித்துப் பாரை வாழ வழிவகுக்க, விவேகானந்தராகவோ, காந்தியாகவோ தம்மை மாற்றத் தயார் பண்ண வேண்டும். அப்பொழுது தான் வற்றாத ஜீவநதியாக குறையாத அன்புச் சுரங்கமாக, துருப்பிடியாத சத்திய இரும்பாக, அழியாத கருணை முத்திரையாக, இடைக்கப் பெறாத அன்பும் பெரும் மத்துக்களாக ஆயிரம், ஆயிரம் விடி வெள்ளிகள் நாட்டின் பல பாகங்களிலும் தோன்றி. வாழ்வு என்ற புனிதமான சித்திரத்தை வையமெங்கும் வரைய முடியும்.

--செ. நாகேந்திரராசா

☆

[மேலே கண்ட எட்டுக் கருத்துக்களும் எட்டு மாணவர்களால் எழுதப்பட்ட 'எது வாழ்வு' என்ற தலைப்பின் வந்த எட்டுக் கட்டுரைகளின் சுருக்கம். விடிவெள்ளி மன்றம் நடத்திய விடிவெள்ளி நினைவுக் கட்டுரைப் போட்டியில் இக்கட்டுரைகள் பாராட்டுப் பெற்றன. முதல் மூன்று பரிசில்களைப் பெற்ற நான்கு கட்டுரைகளும் ஏற்கனவே சிறுவர் பூங்காவில் பிரசுரமாயின]

## உங்கள் இராசி பலன்

எழுதுவது

சோதிட ஆசான் செ. தெல்லியூர்

Colombo Studio

[23-8-66 — 29-8-66]

### மேட இராசி

நிலைகேடு, இனசனவிரோதம், ரோகபீடை, குடும்பக் கலகம், பந்துக்கிலேசம், இனபந்துக்கள் வருகை, மனச்சோகம், களத்திரகஷ்டம், செய்காரிய இலாபம், பணவரவு, வாக்கால் துன்பம்.

### இடப இராசி

பிணி, வைத்தியச்செலவு அதிகரிப்பு, பெண்வழி இலாபம், பொன் பொருள் சேர்க்கை, அதிகாரம், சந்தோஷம், பொருள் வரவு, எதிரிகள் வீழ்ச்சி எதிர்பாராதவழியில் சகோதர வழிக்கஷ்டம், அவமானம், அபகீர்த்தி.

### மிதுன இராசி

குடும்பத்தில் வைத்தியச் செலவு, ரோகபீடையும், தொழில் நட்டமும் கவலை, மாதுலன்வழித்துன்பம், களத்திரசுகம், மனப்பயம், பல சேதம், புத்திரவழி கலகம், செய்காரிய நட்டம், பண முடக்கம் பயன்தராது.

### கடக இராசி

நிலைகேடு, குடும்பக்கவலை, விரோதம், பொருள் வீண் செலவு, பெண்களால் சுகம், பொருள் கிட்டல், இனசன விரோதம், ரோகபீடை, சயனபோசன சுகமின்மை, மரணபயம், விபத்து, துக்க சம்பவம் நடத்தல்.

### சிங்க இராசி

ரோகபீடை, தேகநலிவு, பிணியினால் செலவு அதிகரிப்பு, மனத்துயரம், பெண்களால் இலாபம் கிட்டல், அவமானம், பிரயாண கஷ்டம், களத்திர ரோகம், துணைவருக்கு கஷ்டபலன்.

### கன்னி இராசி

வியாதி, பண நஷ்டம், செய்காரிய நட்டம், தொழில்களால் பொருள் வரவு, தனலாபம், சுகம், போசனசுகம், தேகஅசௌக்கியம், இலட்சுமீகரம், பெரியோர் உதவி.

### துலா இராசி

நிலைகேடு, மரணபயம், விபத்து நடத்தல், ரோக பீடை, பல சேதம், புத்திரரால் கலகம், அபகீர்த்தி, அதிகசெலவு, பிதாவழி நன்மை, அவமானம் பெண்களால் கலகம்.

### விருச்சிகஇராசி

பிணி, துயரம், எதிரிகள் வீழ்ச்சி, பொருள் வரவு, இனசனவிரோதம், செய்காரிய நட்டம், அதிகாரிகளுக்கு நன்மை, அதிகார விருத்தி, பொருள்சேர்க்கை, தருமவழிச்செலவு, தெய்வ வழிபாடு, திரவியச் சேர்க்கை.

### தனு இராசி

விபத்து, மனத்துக்கம், பெண்பிரியம், போகசுகம், வியாகூலம், பங்கம், எதிர்பாராத இடையூறுகள், நிலை மாற்றம், திரவிய லாபம், எதிரிகள் வீழ்ச்சி, புத்திரரால் கவலை.

### மகர இராசி

குடும்பத்தில் ரோக பீடை, வைத்தியச் செலவு, பெண்களால் சுகம், பெண் வழி கலகம், துக்கசம்பவம் பெண் வழியில் நடத்தல், ஸ்திரீ பீடை, புத்திவிருத்தி, கல்விச்சிறப்பு, துக்கம், இன சன விரோதம், கலவரம்.

### கும்ப இராசி

நிலைகேடு, இலட்சுமீகரம், சுகம், எதிரிகளால் பீடை ரோகம், மனக்கவலை, பெண்வழி கஷ்டம், காரணமற்ற பயம், அபகீர்த்தி, வீண் தண்டச் செலவு, கலகம்.

### மீன இராசி

பிணியினால் செலவு அதிகரிப்பு, வியாதி, குடும்பத்தில் நட்டம் காணல், கலவரம், பொருள்வரவு, எதிரிகள் வீழ்ச்சி, இலாபம், மதிப்பு, திரவிய லாபம், விபத்து, விடபயம்.

## உலக மேடை

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

வெற்றி பெற்றார். பழம் பெரும் காங்கிரஸ் தியாகி ஆசார்யா கிருபளானி எதிர்க்கட்சிகளின் ஆதரவுடன் சுயேச்சை அபேட்சகராகப் போட்டியிட்டு மேனனிடம் தோல்வியடைந்தார்.


மேனனின் வெற்றிக்கு காலஞ்சென்ற பிரதமர் திரு. ஜவஹர்லால் நேருவே தான் முக்கிய காரணம். காஷ்மீர் பிரச்னை ஐ. நா. வில் விவாதிக்கப்பட்டுக் கொண்டிருந்த அந்நேரத்தில் திரு. மேனன் ஐ. நா. வில் இந்தியாவின் கட்சியை மணிக்கணக்காக எடுத்து வாதித்துக்கொண்டிருந்தார். இரண்டு மூன்று தடவைகள் மயக்கமடைந்து, வைத்திய பரிசோதனைக்கும் ஆளானார். இது அவருக்கு இந்தியாவில் அனுதாபத்தையும் ஆதரவையும் அதிகரித்தது. இச்சமயத்தில் மேனனுக்காக வடக்குப் பம்பாய்த் தொகுதியில் நேரு பிரச்சாரம் செய்துகொண்டிருந்தார். காங்கிரசுக்குள்ளேயே மேனனுக்கு எதிர்ப்புக் கிளம்பியபோதிலும் நேருவின் ஆதரவு மேனனை தேர்தலில் வெற்றி பெறச் செய்தது.

இன்று நேரு இல்லை.

வடக்குப் பம்பாய்த் தொகுதியில் மீண்டும் ... போட்டியிட முன்வரவேண்டாம் என்று பம்பாய் காங்கிரஸ் கமிட்டி மேனனைக் கேட்டிருக்கிறது. கேரள வாலிபர் காங்கிரசோ, கேரளத்தில் ஒரு தொகுதியில் வந்து போட்டியிடுங்கள் என்று மேனனைக் கேட்கிறது.

மேனன் தேர்தலில் போட்டியிடுவாரா? போட்டியிட்டால் எந்தத் தொகுதியில் போட்டியிடுவார்?

வலிமை
குளிர்மை
சிக்கனம்
இவற்றிற்கு



பிரசித்தி பெற்ற யானை மார்க்
அஸ்பெஸ்ரஸ்
கூரை சீற்றுக்களையே உபயோகியுங்கள்.
கிடைக்குமிடம்:
சண்முகம் ஸ்ரோர்ஸ்
(யாழ் நகரின் பிரபல இரும்பு வியாபாரிகள்)
222, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
போன்: 697

## நயினையில் நண்ணிய அம்பிகை!

யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்திருந்த திரு. கி. வா. ஜகந்நாதன் நயினாதீவு சென்று நாகபூஷணி அம்மையைத் தரிசித்தபின் யாழ்ப்பாணம் திரும்பிக் கொண்டிருந்தார். அவருடன் சென்ற நண்பர் ஒருவர் கவிதை பாடிக் காட்டினார். கி. வா. ஜ. வும் பாடினார். இதோ படகிலிருந்தபடியே கி. வா. ஜ. பாடியபாடல்:

நல்லது நல்லது நல்லது நயினையில்
  நண்ணிய அம்பிகையின்
மெல்லடி கண்டு வணங்கி விடைபெற
  விரும்பி நடந்தனமே
பல்லவை யாகிய பாவமகன்றிடப்
  பார்ப்பதி யைப்பணிந்தோம்
வல்ல கடற்பட கிற்பல ரோடு
  மகிழ்ந்து திரும்பினமே.

சிங்க மெனக்கொடி நாட்டிய சிங்கள
  தேசமி திற்பலவாம்
புங்கவர் போற்றிய நற்றல முண்டு
  புராரி இடத்துறையும்
அங்கரி நல்நயி னைதனி லேயுறை
  சாம்பவி அரவணியும்
மங்கலை தன்னை வணங்கி நெகிழ்ந்து
  மகிழ்ந்து படர்ந்தனமே.

மாநயினைத் தீவு வரும்போது தாண்டுதற்குத்
தூநயமா ரும்படகு துன்னன்பில்-யாம் நனியிங்
கேறிக் கடக்க இயற்றரும லங்கமெனும்
விறுடையான் செய்தான் விழைந்து.

## வைத்திய ஒளி

# யானைக்கால் வியாதி

— க. வேல்மணி —

இவ்வியாதி இலங்கையில் வசிப்போரில் ஒரு விகிதத்தினருக்கு இருப்பதாகக் கண்டுள்ளார்கள். இவ்வியாதியைச் ச்லீபதம், யானைக்கால் வியாதி, சிலாவதிபதம், எலிபன்டையற்றஸிஸ், என்று பல பெயர்களால் அழைக்கின்றார்கள்.

மலேரியா நோயை உண்டு படுத்தும் நுளம்புகள் போன்று ஒரு வகை "கியூலெக்ஸ்" என்னும் நுளம்பால் யானைக்கால் வியாதி பரவுகின்றது. "பைல் ஏறுயா" என்னும் (Filariasis) புழுக்கள்தான் யானைக்கால் வியாதியை உண்டுபடுத்துகின்றன. இப்புழுக்களை (Culex) கியூலெக்ஸ் என்னும் நுளம்பு மனிதனின் சருமத்தின் வழியாகச் செலுத்துகின்றது. இவைகள் சருமத்தின்மூலம் சென்றதும் 'லிம்பற்றிக் வெசல்' (Lymphatic-vessels) களில்சென்று பைல்எறியாப் புழுக்கள் பல முட்டைகளை இட்டுப்பெருகுகின்றன. இதனால் இரத்த ஓட்டம் (Blood Supply) தடைபடுகின்றது.

இந்நுளம்பானது மனிதனில் குத்தி யானைக்கால் புழுக்களைச் செலுத்திய நாட்களில் இருந்து சுமார் 3-4 மாதங்களின் பின்னர் பல குறிகுணங்கள் மனிதருக்குஏற்படுகின்றன. அவை:

குறிகுணங்கள் யாவை?

ஒரு நுளம்பு மனிதனைக் குத்தியதும் 3-4 மாதங்களின் பின்னர் குத்திய இடங்களுக்குக் கிட்ட உள்ள பகுதிகளின் பொருத்துக்களில் அதிக வலியை உண்டுபண்ணிக் கொண்டு சுரத்துடன் வீக்கம் கிரமமாகப் பாதத்தை நோக்கிச் செல்லும். இதே விதமான வீக்கம் கை, செவி, நேத்திரம், பீஜகோசம், உதடு நாசி, இவற்றிலும் உண்டாகின்றன. கடைசியில் குண்டிக்காய்த் தாபிதங்களும், கால்களில் உள்ள தோலும் சவ்வும், எலும்பும் பருத்து அவைகளில் நீர்கொண்டிருக்கும். காலம் செல்லச்செல்ல சிலருக்குப் பீஜப்பையை அனுசரித்து 50—55 பவுண் கனமுள்ளதாய்ப் பருத்தும் போவதும் உண்டு. இரவு நேரங்களில் குளிரும் காய்ச்சலும்காணப்படும். நாட்கள் செல்லச்செல்ல வியாதியுண்டாகிற விடத்தில் வேதனையும் வீக்கமும் இருக்கும். சோஷணக்கிரந்திகள் வீங்கி நோவெடுக்கும் இக்குறிகள் அடிக்கடி சிலநாள் வரையில் கண்டு முடிவில் வியாதி கொண்டகாலானது யானைக்கால் போலப் பருத்து விருபமாய் விடும். சருமத்திலிருந்து ஒருவேளை விரணங் கண்டால் அதிலிருந்தாவது, ஒருவித விஷ நீர் வெளிப்படும். வீக்கமுற்ற கால்கள் பளபளப்புடனும் வெண்ணிறமாயும், கனமாகவும், கடினமாகவும், புற்றைப் போல் கிளம்பி மூட்கள் போன்ற முனைகளடர்ந்ததாயும் பெரியதாகவும் அரிப்புள்ளதுமான பிசுபிசுப்பான நீர்வடியக் கூடியதாயும் பார்ப்பதற்கு அவலட்சணமான நிறங் கொண்டிருக்கும்.

மாதவநிதானப்படி

ச்லீபதம் என்னும் யானைக்கால் வியாதியானது சிலையைப் போல பாதம் விகாரப்படுவதால் உண்டாகும் வியாதியாகும் என்று கூறப்பட்டுள்ளது

யானைக்கால் வியாதிக்கு ஏற்ற பிரதேசங்கள்

இவ்வியாதி உஷ்ணப்பிரதேசங்களாகிய இலங்கை, கொச்சி, ஆபிரிக்கா முதலிய இடங்களில் அதிகமாகக் காணப்படுகிறது. அதிகமாக இக்கிருமிகள் வாழும் இடங்கள் பழைய தண்ணீர், அந்தரத்தாமரை படர்ந்த குளம் குட்டைகள், சதுப்பு நிலங்கள், குப்பை கூளங்கள் தங்கி நிற்குமிடங்கள், அடர்ந்த மரங்களடர்ந்த காட்டுப்பிரதேசங்களை ஆகும். இலங்கை

(11ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளம்பரம்

## யாழ்ப்பாணம் மாநகரசபை அறிவித்தல்

## ஏல விற்பனை

1966-ம் ஆண்டு ஆவணி மாதம் 27-ம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 3-00 மணிக்கு கீழ்க்காணும் பொருட்கள் அவற்றுக்கெதிரே குறிப்பிட்ட இடத்தில் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

கூடிய கேள்விக்காரர் உடனே முழுப்பணத்தையும் ஏலவிற்பனை செய்யும் உத்தியோகத்தரிடம் செலுத்தி பொருட்களை அப்புறப்படுத்த வேண்டும்.

| ஏலப் பொருட்கள் | இடம் |
|---|---|
| 1. உரிமை கோரப்படாமல் திரும் கட்டாக்காலி மாடுகள். | யாழ். மாநகரசபை முன்றல். |
| 2. எருக்குவியல் | கொல்களம், யாழ்ப்பாணம். |

(ஹட்சன் செல்வராசா)
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகர அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
18-8-66.

933


# "லட்சியப் பயணம் . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வாறு தமிழரசுவாலிப முன்னணித் தலைவரும், மட்டக்களப்பு முதலாவது எம். பியுமான திரு. செ. இராசதுரை இன்றுகாலை மாவிட்டபுரம் கந்தசாமி கோயில் வீதியில் அமைக்கப்பட்டுள்ள அலங்காரப் பந்தலில் அமைந்துள்ள திருமலை நடராசன் அரங்கில் ஆரம்பமான தமிழரசு வாலிப முன்னணி மகாநாட்டிற்குத் தலைமைவகித்து உரை நிகழ்த்துகையில் குறிப்பிட்டார்.

## வாலிபர்களின் சைக்கிள் ஊர்வலம்

ஆயிரக்கணக்கான வாலிபர்கள் தமிழரசுக்கட்சியின் மூவர்ணக் கொடிகளைத் தாங்கியவண்ணம் பலவேறு தொகுதிகளிலிருந்தும் மகாநாட்டு மைதானத்தை வந்தடைந்தனர். வாலிபர்களை வரவேற்ற பின்னர் கட்சியின் மூவர்ணக் கொடியை வாலிபமுன்னணித் தலைவர் ஏற்றிவைத்தார். திரு.முழக்கம் முருகப்பா தேசியகீதம் பாடியபின் செல்வன் சோ. சேனாதிராசா வரவேற்புரை நிகழ்த்தினார்.

மகாநாட்டுப் பந்தலின் உள்ளேயும் வெளியேயும் திரண்டிருந்த ஆயிரக்கணக்கான மக்களின் மகிழ்ச்சி ஆரவாரத்துக்கிடையே திரு இராசதுரை தமது தலைமையுரையை நிகழ்த்தத் தொடங்கினார். அவர் தமது தலைமைப் பேருரையில் குறிப்பிட்டதாவது:

## மைந்தர்கள் மகாநாடு

தமிழ் பேசும் மக்களை அடிமைத் தனத்தின் சந்நிதானத்திற்குத் தமிழ்த் தலைவர்கள் அழைத்துச்சென்ற தருணத்தில் — தமிழினம் தளபதியற்ற சேனையைப்போலவும், சுக்கான் இழந்த கப்பலைப் போலவும் தத்தளித்த வேளையில் தமிழினத்தைச் சரியான பாதைகாட்டி தான் தேடிய செல்வத்தைச் செலவளித்து-ஊன் மறந்து, உறக்கம் துறந்து, நாடு, நகரம், பட்டிதொட்டிகளெல்லாம் பறந்து தமிழினத்தின் உரிமையை எடுத்துக்கூறி-பாராளுமன்றப் பதவியை இழந்த போதும் மக்களை மறந்துவிடாது பணிபுரிந்த தமிழினம் செய்த தவப்பயன் என நாம் கருதும் தந்தை செல்வாவின் தொகுதியிலே மைந்தர்கள் இம் மகாநாட்டைக் கூட்டுவது மகாநாட்டுக்குமேலும் பெருமதிப்பை அளிக்கின்றது.

## நெஞ்சுரத்தை உருவாக்கினோம்

அடுக்கடுக்காகத் தமிழினத்தைஎதிர்நோக்கிவந்த அரசியல் அபாயங்களைத் தடுத்து நிறுத்த தமிழரசுக்கட்சி எடுத்த நடவடிக்கைகளை நாடறியும். அந்த நடவடிக்கைகள் மூலம் இந்த நாட்டில் நம் இனத்திற்குரிய அரசியல் அந்தஸ்தை எடுத்துக்காட்டினோம். தலைமுறை தலைமுறையாக அடிமைத்தனத்தில் ஊறிக்கிடந்த நம் மக்கள் மத்தியில் இனத்திற்கும், மொழிக்கும் தியாகம் செய்யும் நெஞ்சுரத்தை உண்டு பண்ணினோம். பதவிகளால், பட்டங்களால் தமிழினத்தை விலைக்கு வாங்கிவிடலாம் என்று முடிவுசெய்திருந்த அரசியல்மேதைகளின் முடிவை முற்றாக மாற்றினோம். உத்தியோகங்களும், உத்தியோக உயர்வுகளுமே ஒரு இனத்தின் வாழ்வு என்று கருதிய வாலிபர்களைக் களம் புகுந்து, உரிமைப் போரில் நான் நீஎன்று போட்டிபோட்டு முன்னேற வைத்தோம். ஆட்சிக்கு வரும் எந்தக் கட்சியானாலும் தமிழ்பேசும்மக்களின் அரசியல் உரிமைகளை வழங்காவிலையாயின் அந்த அரசாங்கங்களை ஆட்சிபீடத்திலிருந்து அகற்றக் கடைசிவரை தமி

(12ம் பக்கம் பார்க்க)


# வரிவிளம்பரம்

### வைத்தியம்

தொய்வு, கசம், நீரிழிவு, பிரந்தி முதலிய வலை கொடிய வியாதிகள் குணப்படுத்திய விபரங்கள் அடங்கிய கற்றலோக் இலவம். மந்திரிமார் மற்றும் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்று வியந்துள்ளனர். வைத்தியர் மகிபூரணனந்தர், கைலாசபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

### விற்பனைக்கு

காணி

நவாலி வடக்கு அரசினர் பாடசாலைக்கு அருகாமையில் விதானை வளவு எனப்படும் வீடு கட்டும் காணி விற்பனைக்குண்டு. பரப்பு 33. முழுதாகவோ பங்குகளாகவோ பிரித்துக்கொடுக்கலாம். விபரங்கட்கு கீழ்க்காணும் விலாசத்தில் விசாரிக்கவும்: T P பொன்னை, 64, கச்சேரி-நல்லூர் வீதி, யாழ்ப்பாணம். 830

### தேவை

ஆசிரியை:
தொழிலாளர்கள்:

நெசவுத் தொழிலில் சிறந்த அனுபவமுள்ள ஆசிரியை, தொழிலாளர் இருபாலாரும் தேவை. 28-ந் திகதிக்கு முன் விண்ணப்பிக்கவும். முகவரி: முகாமையாளர், மெறில் நெசவுத் தொழிற்சாலை, கரவெட்டி. 871

### கல்வி

வகுப்புகள்

அரசாங்க ஊழியர்களின் இரண்டாம் தரம், பதவி உயர்வு கணக்காளர் சேவை, நிர்வாக சேவை பரீட்சைகளுக்கான வகுப்புகள் இப்பொழுது நடைபெறுகின்றன. ஐக்கிய கலாசாலை, நெல்லியடி, கரவெட்டி. 873

# பிரிவிடுதல் நொத்தீஸ்

பருத்தித்துறை
டிஸ்திறிக் கோட்டில்
1 கரணவாய் தெற்கு தம்பையா மயில்வாகனம்.
2 பெண் செல்லாச்சிப் பிள்ளை
—வழக்காளிகள்
எதிராக

இல. 7468
(இறப்பு)

1 இமையாணன் மயில்வாகனம் மாணிக்கவாசகர்
(1a) டாக்டர் மாணிக்கவாசகர் இராமநாதன்
2 சூராவத்தை ஏழாலை கன்னாகம் சின்னையா வைத்திலிங்கம்
3 பெண் செல்லமணி
4 திருநெல்வேலிமயில்வாகனம் சோமசுந்தரம்.
5 கரணவாய் தெற்கு T. நமசிவாயம் கைம்பெண் தங்கச்சியம்மா
6 கரணவாய் வடக்குசதாசிவம்பிள்ளை செகராசசுப்பிரமணியம்,
7 கரணவாய் தெற்கு வல்லிபுரம் செல்லையா
8 பெண் செல்லாச்சிப் பிள்ளை
9 கொழும்பு சதாசிவம் பிள்ளை கனகசபாபதி
10 கரணவாய் தெற்குகணபதிப்பிள்ளை பொன்னையா
11 விசாகமுத்து நடராசா
12 பெண் நவபாக்கியம்
13 சின்னையா சிவப்பிரகாசம்.
14 வல்லிபுரம் சின்னத்தம்பி கந்தசாமி
15 பெண் தங்கமணி
16 ஐயாத்துரை கைம் பெண் வள்ளியம்மை
சிறுபிள்ளைகள்:
17 ஐயாத்துரை மகள் தவமணி
18 ஐயாத்துரை சுப்பிரமணியம்
19 ஐயாத்துரை தவேந்திரன்
20 ஐயாத்துரை நவரட்ணம் (இவர்களில் 17-20எதிரிகள் பராயமற்றவர்களாகையினால் அவர்களின் பராமரிப்புத் தத்துவகாரன் 16-ம் எதிரி)
21 திருப்பிட்டி மயில்வாகனம் கார்த்திகேசு
22 பெண் விசாலாட்சிப் பிள்ளை
23 கரணவாய் தெற்கு வல்லிபுரநாதர் கணபதிப் பிள்ளை கைம்பெண் தேவநாயகி
24 மயில்வாகனம் பொன்னையா
25 பொன்னம்பலம்
26 ஆறுமுகம் கந்தையா
27 பெண் வள்ளியம்மை
28 நல்லூர் சின்னத்தம்பி சேனாதிராசா
29 நல்லூர் செட்டிவீதி சின்னத்தம்பி மகள் வள்ளியம்மை. இவ பராயமற்றவாயிருப்பதால் இவளின் பராபரிப்புத் தத்துவகாரன் சதாசிவம் கந்தையா சதாசிவம் கந்தையா
30 கரணவாய் தெற்கு கந்தவனம் இராமலிங்கம்
31 பெண் தெய்வானைப் பிள்ளை
32 சுப்பர் கைம் பெண் பாறுபதி
33 பூதர் ஆறுமுகம் பொன்னையா
34 ஆறுமுகம் பொன்னையா
35 பெண் தனபாக்கியம்
36 வேலாயுதர் கந்தையா
37 பெண் பாக்கியம்
38 இளையதம்பிகைம்பெண் பூபதி
39 தம்பையா சுப்பிரமணியம்
40 V. கந்தையா கைம் பெண் செல்லம்மா
எதிராளிகள்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வடமராட்சிப்பகுதி உடுப்பிட்டிக் கோவிற்பற்று கரணவாய் இளாமக் குறிச்சியிலுறை காதாவளையும் மறுபிரிவுகளும் நில. பர. 52 குளி 4 என்னும் ஆதனம் 1951-ம் ஆண்டின் 16-ம் இலக்க பிரிவிடுதற்கட்டளைச்சட்டத்திற்கமைய மேற்படி கோட்டில் மேற்படி இலக்கத்தின் ஓர் பிரிவிடுதல் வழக்கு தொடர்ந்திருக்கிறதென்று இத்தால் அறிவிக்கப்பட்டிருக்கின்றது.

மேற்படி வழக்கு 1966-ம் ஆண்டு புரட்டாதி மாதம் 18-ந் திகதி விசாரணைக்குத் தாக்கல் செய்யப்பட்டிருக்கின்றது.
கோட்டாரின் கட்டளைப்படி
மு ஸ்ரீபத்மநாதன்
பிரா[illegible]
1966-ம் வருடம்
ஆவணி மாதம் 18-நந்திகதி
932

# கேள்வி விளம்பரம்

பள்ளிக்குடா றோட்டு வேலைக்குப் பதிவு செய்த கொந்தராத்துக்காரரிடம் இருந்தே கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.

கேள்விப்பத்திரப் பணமாக ரூபா 10/- கட்டிய தன் பேரில் வழங்கப்படும் உத்தியோக பூர்வமான பத்திரத்திலேயே கேள்விகள் தயாரிக்கப்படல் வேண்டும். கேள்விப்பத்திரங்களை 4-9 66-ந் திகதி நண்பகல் 12-00 மணிவரை இக்கந்தோரில் பெற்றுக் கொள்ளலாம்.

கேள்விப் பத்திரங்கள் 5-9-66-ந் திகதி காலை 10-00 மணிவரை ஏற்றுக் கொள்ளப்படும். கேள்விப் பத்திரங்கள் அக்கிராசனர், கிராமசபை, பூநகரி என்னும் விலாசத்திற்குப் பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். அதே நேரத்தில் அதன் பிரதியொன்று உள்ளூராட்சி உதவி அதிபருக்கும் அனுப்புதல் வேண்டும். காகித உறையின்இடதுபக்க மேல் மூலையில் வேலையின் பெயர் எழுதப்படல் வேண்டும்.

வேலையின் விபரங்கள் யாவும் கந்தோர் நேரங்களில் அறிந்து கொள்ளலாம்.

த. செல்லத்துரை
அக்கிராசனர், கிராமசபை,
பூநகரி.

935


# யானைக்கால் வியாதி

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

யில் தெகிவளை, நுககொட, வத்தளை, கோட்டை முதலிய இடங்களில் வசிப்போருக்கே இந்நோய் ஏற்படுவதாகக் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

(அடுத்த இதழில் முற்றும்)


REGAL—JAFFNA
NOW SHOWING
TONY RUSSEL
HELGA LIFE
in
THE SPARTAN
GLADIATOR
(cinemascope Eastmancolor)

மகாத்மா தியேட்டர்
(நெல்லியடி)
தினசரி 6-30, 9-30 மணி
எம். ஜி. ஆர். - ஜெயலலிதா
முதலியோர் நடித்த
ஆயிரத்தில் ஒருவன்
(ஈஸ்ட்மன் கலர்)

நியூ காலிங்கன்
(இணுவில்)
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறை தினங்களில் 2-30 மணி
ஸ்ரீகாந் - ஜெயலலிதா
நடித்த
வெண்ணிற ஆடை

ராஜா
(யாழ்ப்பாணம்)
தினசரி 2-30, 6-30, 9-45
போயா தினங்களில் 4 காட்சிகள்
[illegible]
நடித்த
கடவுளைக் கண்டேன்

இப்பொழுது திரையிடப்படுகிறது!

கிங்ஸ்லி பிளாஸா நவா
(கொழும்பு) (வெள்ளவத்தை) (கொம்பனித்தெரு)
வெலிங்டன் விஜயா ஸ்ரீகிருஷ்ணா
(சாந்தமருது) (மட்டக்களப்பு) (திருமலை)



ரி. எம். சௌந்தரராஜன்
பி. எஸ். சரோஜா
எம். ஆர். ராதா, மனோகர்,
சாரதா, லட்சுமி, ராஜம்
மற்றும் பலர் நடித்த
அருணகிரிநாதர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "உங்கள் நண்பனாக இங்கு வந்துள்ளேன்"

## மாம்பழப் பிரியர் மந்திரி

மாவிட்டபுரம், திங்கள்

இன்று காங்கேசன் துறைக்கு விஜயஞ்செய்த ராஜாங்க அமைச்சர் திரு. ஜே. ஆர் ஜயவர்த்தன யாழ்ப்பாணத்தின் புகழ்மிக்க மாம்பழத்தை விரும்பிக்கேட்டுச் சுவைத்துச் சாப்பிட்டார்.

காங்கேசன்துறை சிமெந்துத்தொழிற்சாலை விருந்தினர் விடுதியில் காலைச் சிற்றுண்டியை முடித்துக் கொண்ட திரு. ஜெயவர்த்தன தமது உதவியாளரிடம் "மாம்பழம்" கேட்டு வாங்கிச் சுவைத்தார்.

## கி. ஆ. பெ. இன்று வருகிறார்

தமிழரசு வாலிபமுன்னணி இலக்கிய மகாநாட்டில் கலந்துகொள்ளும்பொருட்டு தமிழகத்திலிருந்து வரும் முத்தமிழ்க் காவலர் கி. ஆ. பெ. விசுவநாதம் செவ்வாய்க்கிழமை காலை இங்கு வருவார் என தமிழரசுக் கட்சிப் பொதுச்செயலாளர் திரு. அ. அமிர்தலிங்கம் கூறினார்.

செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணிக்கு விசேஷமான உரை ஒன்றினை முத்தமிழ்க்காவலர் கி. ஆ. பெ. விசுவநாதம் நிகழ்த்துவார் என்று திரு. அமிர்தலிங்கம் மேலும் கூறினார்.

## திருமணம்

தேவதாசன் — கிருசாந்தி

திருநிறைசெல்வன் ஞா. தேவதாசன் (Staff, Muslim Mahavidyalaya, Katugastota) அவர்களுக்கும், திருநிறைசெல்வி போல் கிருசாந்தி அற்புதமலர் (Dept. of Biochemistry, Faculty of Medicine) அவர்களுக்கும் எதிர்வரும் 29-8-1966 திங்கட்கிழமை காலை 9 மணியளவில் கந்தர்மடம், கந்தபுராண வீதியிலுள்ள விடுதலை மண்டபத்தில் திருமணம் நடைபெறும். அவ்வமயம் நண்பர்களும் உறவினர்களும் சமுகந்தந்து மணமக்களை ஆசிர்வதிக்கும் வண்ணமும், அதன்பின் மணமகள் இல்லத்தில் நடைபெறும் வரவேற்பு வைபவத்தில் கலந்து கொள்ளுமாறும் அன்புடன் கேட்டுக்கொள்ளுகின்றோம்: வி. எஸ். ஞானப்பிரகாசமும் பாரியாரும், 18, ரயில்வே றோட், கந்தர்மடம், யாழ்ப்பாணம் — கே. எஸ். போலும் பாரியாரும், 86/2, டைன்லி வீதி, யாழ்ப்பாணம்.

881

## திருமணம்

### சுப்பிரமணியம்-லீலா

சபாரத்தினம் சுப்பிரமணியத்திற்கும் லீலா அருணாசலத்திற்கும் இம்மாதம் 28-ம் தேதி ஞாயிற்றுக் கிழமை இரவு 8-30 மணிக்கு செல்வச்சந்நிதி கோவிலில் நடைபெறும் திருமண வைபவத்திற்கு நண்பர்களையும், உறவினர்களையும் அன்புடன் அழைக்கின்றோம். தனிப்பட்ட அழைப்புக்கள் அனுப்பப்படவில்லை. ஊரிக்காடு, வல்வெட்டித்துறை. வே. அருணாசலம்துரை தம்பதிகள், செ. அருணாசலம் தம்பதிகள்.

873

# யாழ்ப்பாணம் வந்த ராஜாங்க அமைச்சர் செய்தி

## விமான நிலையத்தில் கோலாகல வரவேற்பு

— நமது நிருபர்கள் கே. இராசலிங்கம், இரா. சுந்தரராஜசர்மா —

மாவிட்டபுரம், திங்கள்

"உங்கள் நண்பனாகவே நான் இன்று இங்கு வந்திருக்கிறேன் உங்கள் பிரச்னைகளை, தேவைகளை ஆராய்ந்து உங்கள் குறைகளை நேரில் கண்டறிந்து அவற்றை நீக்க ஆவன செய்வேன் உங்கள் மத்தியில் இன்று இருப்பதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். தேசிய அரசாங்கம் ஆட்சிக்கு வந்தபின் மக்கள் மகிழ்ச்சியுடன் வாழ்கிறார்கள்" என்று ராஜாங்க அமைச்சர் ஜே. ஆர். ஜயவர்த்தன இன்று காலை இங்கு வந்து சேர்ந்ததும் 'ஈழநாடு' மூலம் விடுத்த பிரத்தியேக செய்தியல் தெரிவித்தார்.

தேசிய அரசாங்கத்தின் ராஜாங்க அமைச்சர் திரு. ஜே. ஆர் ஜயவர்த்தனவும் திருமதி ஜயவர்த்தனவும் இன்று காலை பலாலி விமான நிலையத்தில் வந்திறங்கியபோது அவருக்கு மிக உற்சாகமான வரவேற்பளிக்கப்பட்டது.

விமானநிலையம் தேசியக்கொடிகளாலும் மகரதோரணங்களினாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தது. விமான நிலையத்துக்கு வெளியே தமிழரசுக்கட்சியின் மூவர்ணக் கொடிகள் பறந்துகொண்டிருந்தன. விமான நிலையத்தில் வந்திருந்த கார்களிலெல்லாம் தமிழரசுக் கட்சியின் மூவர்ணக்கொடிகளே காட்சியளித்துக் கொண்டிருந்தன.

(2-ம் பக்கம் பார்க்க)

## "இலட்சியப்.

(11-ம் பக்கத் தொடர்ச்சி)

மரசுக்கட்சி பின்னிற்கா தென்ற நிலையை உருவாக்கினோம். உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் இலங்கைத் தமிழினத்தின் ஒரே கட்சி தமிழரசுக்கட்சி, ஒரே தலைவன் தந்தை செல்வா என்பதை உணரச் செய்திருக்கின்றோம்.

### தமிழ் பல்கலைக்கழகம்

இன்று நாட்டிலே தேசிய அரசாங்கம் அமைய நமது கட்சி மூலகாரணமாயிருந்தது நாட்டில் மீண்டும் சமாதானமும் ஐக்கியமும் மலரத் தொடங்கியிருக்கின்றது. பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட தமிழ் உரிமை மசோதா நம் கட்சியின் மாபெரும் வெற்றியாகும். இது நாம் செய்த தியாகத்தின் பரிசாகும் மாவட்டசபை மசோதா விரைவில் நிறைவேற்றப்படவிருக்கின்றது. இவ்விரண்டு மசோதாக்களும் தமிழ்மக்களுக்கு மட்டுமல்ல நாடுபூராவுக்கும் நன்மை பயப்பதாய் அமைந்திருக்கின்றது. தமிழ்ப்பல்கலைக்கழகம் நிறுவும் காலம் அதிக தூரத்தில் இல்லை. இது நம் இயக்கத்தில் நீண்டநாள் கோரிக்கை. குறிக்கோள்.

### லட்சியப் பயணம் முடிந்துவிடவில்லை

நம் லட்சியப் பயணம் இத்தோடு முடிந்துவிடவில்லை. முற்றுப்பெற்றுவிடவில்லை நம் லட்சியம் வெகு தூரத்தில் இருக்கின்றது. அதை அடைவதற்குத் தமிழ்மக்களுக்கு விசேடமாக வாலிபர்களுக்குப் பொறுமை, கட்டுப்பாடு, தியாக உணர்ச்சி மென்மேலும் வேண்டும். போராட்டகாலங்களைவிட சமாதானகாலத்திலே நாம் விழிப்பாயிருக்க வேண்டும். நம் உணர்ச்சிகள் உறங்கிவிடக்கூடாது. மீண்டும் உத்தியோகம், பதவி உயர்வு போன்ற அபிலாஷைகளுக்கு நம்மினம் அடிமைப்பட்டுவிடக்கூடாது. சதா விழிப்புடனும், அவதானத்துடனும் தமிழினத்தின் சுபீட்ச வாழ்வில் அக்கறையுடனும் நாம் இருக்கவேண்டும்.

அரசாங்க உத்தியோக மோகத்திற்கு அடிமையாகிவிடாமல் வளங்கொழிக்கும் நமது பிரதேசங்களைப் பொன் விளையும் பூமியாக மாற்றவும், அள்ள அள்ளக் குறையாத கடல்செல்வத்தை அமைக்கவும், தேடுவாரற்று அழியும் இயற்கை தரும் கனிப்பொருட் [illegible] பெருக்கவும் நாம் [illegible] டபிகொள்ளவேண்டும்.

## தனி மனிதனுக்கே அதிக முக்கியமளித்தார் மகாத்மா

—டாக்டர் சச்சாரி

யாழ்ப்பாணம், செவ்

"மனித வாழ்க்கை அனைத்தும் சத்தியத்தை மையமாகக்கொண்டு இயங்கவேண்டும். சத்தியமே கடவுள் என்றும் கூறினர் மகாத்மா. இந்த இலக்கை எப்படி அடைவது? அகிம்சைமூலம் தான் சத்தியத்தை அடையமுடியும். அகிம்சை என்பது உடலளவில் துன்பம் செய்யாததுமட்டுமல்ல உள்ளத்தாலுமட்டுமன்றி வாழ்க்கையில் செயல் படுத்தவேண்டும். தீய சிந்தனை, அநீதி, வஞ்சகம், சுரண்டல் முதலிய அகிம்சை வாழ்க்கையில் இடமில்லை. அகிம்சை வாழ்க்கை மிக கஷ்டம். ஆனாலும் தெய்வ நம்பிக்கை வைத்து அவரை பிரார்த்திப்பதால், வாழ்க்கை தூயதாகி பேரின்பம் கைகூடும். இதுவே மகாத்மா நமக்குக் காட்டிய வழி."

என்றிவ்வாறு இந்திய ஹைகமிஷனர் டாக்டர் பீம்சென் சச்சார், நேற்று யாழ்ப்பாணம் நகர மண்டபத்தில் காந்திசேவா சங்கத்தின் ஆதரவில் பேசுகையில் குறிப்பிட்டார். திரு. கே. நேசையா தலைமைவகித்தார்.

இந்திய தூதுவர் மேலும் பேசியதாவது:-

நாம் எதைச் செய்தாலும் இதயபூர்வமாக நேர்மையாகச் செய்தால் வெற்றி கிடைக்கும் என்ற நம்பிக்கைவேண்டும். பலன் இல்லாமல் போகாது. இது பகவானின் வாக்கு. இதை எல்லா சமயங்களும் ஒப்புக்கொண்டுள்ளன. அகிம்சை என்பது உள்ளத்தூய்மையே. வாழ்க்கையின் ராஜபாட்டையும் உள்ளத்தூய்மையே.

இக்காலத்தில் வாழ்க்கையிலே எப்படி அதிக பொருள் சேர்க்கலாமென்பதே நம் நோக்கமாகவுள்ளது. புகழையும், அதிகாரத்தையும், பிறரை அடக்கி ஆள்வதையுமே நோக்கமாகக் கொண்டுள்ளது இக்காலத்தில் பலரது வாழ்க்கையும் சுரண்டல், வெறி, மதுபானம், களவு, பொய் எல்லாம் இம்சையின் ஆட்டங்கள். இதனால் நாசமே ஏற்படுவதாக இருக்கும். சட்டத்தின் மூலம் நேர்மையை நிலைநாட்ட முடியாது. அது உள்ளத்தில் உதயமாவது.

"மகாத்மா தனி மனிதனுக்கு அதிக முக்கியமளித்தார். அவன் நன்மைக்காகவே எல்லா தியாகங்களும் செய்தார். தனி மனிதனின் உள்ள வளர்ச்சிக்கு, ஆன்மாபத்துக்கு இடையூறாக எதையும் செய்யார். காந்தியடிகளின் சர்வோதயக் கொள்கை, எல்லா உயிர்களின் நன்மையுமேயாகும். ஒரு உயிருக்கும் துன்பம் கூடாது.

திரு. வேலாயுதபிள்ளை நன்றி கூறினார். முதலியார் திரு. சின்னத்தம்பி மொழிபெயர்த்தார்.

## ஐக்கியம்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அவர்கள் மறக்க முடியாது. இந்த அன்புப் பிணைப்பினால் இருசமூகங்களுக்குமிடையே நிலவும் உறவுகளும் விருத்தி பெற முடிகிறது" என்றும் ராஜாங்க மந்திரி கூறினார்.

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இரவு பொதுக்கூட்டத்தில் ராஜாங்க மந்திரி திரு. ஜே ஆர். ஜெயவர்த்தன, ஸ்தல ஸ்தாபன மந்திரி திரு. எம். திருச்செல்வம், திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் எம். பி. உட்பட பலர் உரை நிகழ்த்துவர்.

## தேசிய ஐக்கிய. . :

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மந்திரியின் உயிவியுடனும், ஏனைய சக அமைச்சர்களின் ஒத்துழைப்பினாலும் தமிழ் மக்களின் சகலவித குறைபாடுகளையும் நிவர்த்தி செய்ய தேசிய அரசு முன் வரும்.

### மந்திரி 'திரு' முழக்கம்

இவ்விழாவில் உள்ளூராட்சி மந்திரி திரு. எம். திருச்செல்வம் பேசுகையில் தமிழ்ப் பகுதியின் குடிநீர்ப் பிரச்னை தீர குழாய் நீர் விநியோகம் செய்ய யோசித்துள்ளோம். இதற்கு ஐ நா. இஸ்ரவேல் நாடுகளின் உதவி கோரப்பட்டுள்ளது இது சாத்தியமாகாத பட்சம் உப்பு நீரை நன்னீராக்க முயலுவோம். 1000 கலன் நீர் ஒரு ரூபா விதம் பெறுமதியாகின்றது. 1000 கலன் உப்பு நீரை நன்னீராக்கவும் ஐந்துரூபா செலவாகின்றது. இதனால் மின்சார உற்பத்தியும் தொழில் வேலை வாய்ப்பும் ஏற்படுத்த முடிகின்றது" என கூறினார்.

ஊர்காவற்றுறை எம். பி. திரு. வி. நவரத்தினம் பட்டினசபைத் தலைவர் திரு. எஸ். எம். அல்பிரெட் ஆகியோரும் இவ் வரவேற்புபசாரத்தில் உரை நிகழ்த்தினர்.

### சங்கானையில்

சங்கானை, திங்கள்

தேசிய அரசாங்கத்தின் பிரதம மந்திரியும், மந்திரி சபையிலுள்ள அமைச்சர்களும் அனுபவசாலிகள் என்று சங்கானையில் இன்றிரவு தமக்களிக்கப்பட்ட வரவேற்புக் கூட்டத்தில் ராஜாங்க அமைச்சர் திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன தெரிவித்தார். சங்கானை பட்டின சபைத்தலைவர் திரு. எஸ். கே. திருச்சிற்றம்பலம் தலைமைவகித்தார்.

## தொடம்பே

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அறையை விட்டு வெளியே சென்றார். சிறிது நேரம் கழித்து எனது சிகரெட்டுக்கு நெருப்புத் தேடி நான் அடுத்த அறைக்குச் சென்றேன். நான் உள்ளே நுழையும்போது, தொடம்பே முதலாளியின் உடல், இடுப்பில் சாரம்மட்டும் கட்டியபடி, தரையில் கிடக்கக் கண்டேன். அவர் முகம் மேலே இருக்க, முதுகு நிலத்தில் படும்படி கிடந்தார்.

செனிவரத்தின, ரகுலடி சில்வா, இன்ஸ்பெக்டர் பாரீத், இன்ஸ்பெக்டர் வீரசிங்க ஆகியோர் ஜன்னலருகே நின்று பார்த்தனர். பிறகு, தொடம்பே முதலாளியைக் கூரையில் போடும்படி செனிவிரத்தின மற்றவர்களிடம் கூறினார்.

நான் எனது அறைக்குத் திரும்பினேன். சிறிது நேரத்தில் செனிவரத்னவும் அறைக்குத் திரும்பி வந்தார். ஐந்து நிமிடங்களுக்குப்பின், ஏதோ விழும் பெரிய சப்தம் கேட்டது. தொடம்பே முதலாளி இறந்துவிட்டாரா என்று பார்த்துவரும்படி இன்ஸ்பெக்டர் பாரீத்திடம் செனிவிரத்தின கூறினார். அதற்கு மற்றவர் குழந்தையைத் தாம் தூக்கத் தயாரில்லையென்று இன்ஸ்பெக்டர் பாரீத் பதிலளித்தார்.

இப் பத்திரிகை ஈழநாடு லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சென்கோவில் மேல வீதி [illegible] இலுள்ள அவர்களது அச்சகத்தில் 1966-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 23-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org